



காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச் சோப்பின் மிருதுவான செழிப்பாயுண் டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய் கிறது—மேலும் அதன் நறுமணம் உங் களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத் தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழ கை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 19-23 TM

VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

கல்கி
பொருளடக்கம்

மலர் 6
இதழ் 16

1946 நவம்பர் 17

வியய
கார்த்திகை 2

★



★

பூவில் அயனும் இந்தப்
பூமிதனில் வள்ளுவர் தாம்

பாவின் நயமுணரப்
பாலகனாய் வந்தாரோ!

கம்பன் கவியின்
கனியமுதம் உண்டிடவோ

அம்புவியில் வந்திங்(கு)
அவதாரம் செய்தாரோ!

என்று கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை ஒரு தாலாட்டுப் பாட்டில் பாடினார். ஆனால் பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் அவ்வளவு அதிர்ஷ்டம் எங்கே கிடைக்கப் போகிறது? வள்ளுவரையும் கம்பரையும் படிக்கும் அதிர்ஷ்டம் தமிழ் நாட்டில் பிறந்த குழந்தைகளுக்குத்தான் கிடைக்கும்!

குழந்தைகளின் சுரல் குலைக்கட்டி வியாதிகளை அசிரத்தையாக விட்டு விடாதீர்கள். அதன் ஆரம்பக் கோளாரிலேயே அறிந்து கொள்ளுங்கள்.

மலச்சிக்கல், வாந்தி, பேதி மற்றும் இதர குடல், வயிற்றுக் கோளாறுகள், ஜுரம், பசியின்மை, மந்தம், உற்சாக மின்மை, முன் கோபம், வயிற்று உப்புசம் இவைகள் யாவும் ஆரம்பக் கோளாறுகள். அசிரத்தையா யிருந்து விட்டால் இவை குடல் கோளாறுக்கும் காமாலைக்கும் ஆளாக்கி விடும்.

தகுந்த முன்னெச்சரிக்கையுடனிருங்கள் !

பிரபல சுரல் குலைக்கட்டி நிபுணர் ஜம்பி வெங்கட்ரமணய்யாவின் குமாரர் கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்கிறார். அவரிடம் நேரில் கேட்டு ஆலோசனை செய்யுங்கள். நேரம் காலை 9 மணி முதல் 11 வரை. மாலை 3 மணி முதல் 5-30 மணி வரை.

இடம்	தேதி	விலாசம்
திண்டிவனம்	22-11-1946 (மாலை 2 முதல் 5 வரை)	மெஸர்ஸ். சுந்தரா & கோ.,
விழுப்புரம்	23-11-46	ஸ்ரீ ஸி. குபேந்திர செட்டி, ஜெனரல் மர்ச்சண்ட்
கடலூர்	24-11-46	மெஸர்ஸ். கமலா & கோ., பீரிட்ஜ் வியூ — புதுப்பாளையம்
சிதம்பரம்	25-11-46	மெஸர்ஸ். ஸ்ரீ நடராஜா டிஸ்பென்ஸரி
சீர்காழி	26-11-46	டாக்டர் ஆர். சபேச அய்யர், வாய்க்கால் கரை தெரு
மாயவரம்	27-11-46	மெஸர்ஸ். ராமகிருஷ்ணா வைத்திய சாலா, கிருஷ்ணராயர் சந்து
திருவாரூர்	28-11-46	மெஸர்ஸ். மெடிகல் எம்போரியம் மெஸர்ஸ். சுப்பையா மெடிகல் ஹால்
மன்னார்குடி	29-11-46	மெஸர்ஸ். மாடர்ன் பார்மஸி, கெமிஸ்ட்ஸ்
நாகப்பட்டணம்	1-12-46	மெஸர்ஸ். எஸ். டி. சுந்தரராஜ பிள்ளை & சன்ஸ், கெமிஸ்ட்ஸ்
பட்டுக்கோட்டை	3-12-46	ஸ்ரீ வீ. ஜெகதீச அய்யர்
தஞ்சாவூர்	5-12-46	ராஜா சத்திரம்

●

இதர விவரங்களுக்கு :

ஜம்பி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

தலைமை ஆபீஸ் : மயிலாப்பூர் மதராஸ்

பிராஞ்சுகள் :

பெரிய தெரு, கும்பகோணம் | தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 16

என்ன சேதி?

'தர்மாத்மா' மறைந்தார்!

சென்ற வாரம் சர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் காலமானதைப் பற்றி நாம் எழுதிய மை உலருவதற்கு முன்பே மற்றொரு மகத்தான துக்கமும் நஷ்டமும் பாரத தேசத்திற்குச் சம்பவித்திருக்கிறது.

காந்தி மகாத்மாவினாலே 'தர்மாத்மா' என்று புகழப்பட்டவரும் இந்தியக் கலைப் பண்பின் சின்னமாக விளங்கி வந்தவரும் மாசற்ற உள்ளம் படைத்தவரும் பழுத்த தேசாபிமானியும் சிறந்த கர்மயோகியும் நாற்பது கோடி இந்திய மக்களின் நன்மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமாக விளங்கி வந்தவரும் காங்கிரஸ் மகாசபைக்கு மும்முறை தலைவராக விளங்கும் பாக்கியம் பெற்றவருமான பண்டித மதன்மோகன மாளவியா நம்மை யெல்லாம் விட்டு மறைந்து போனார்.

பண்டித மாளவியாஜி தாம் உயிரோடிருந்த காலத்தில் இந்த தேசத்துக்கு என்னென்ன சேவைகள் செய்தார் என்பதை ஆராயப் புகுந்தால், அவர் என்னென்ன சேவை செய்யவில்லை யென்பதையே முதலில் தேடிக் கண்டு பிடிக்க வேண்டியதாயிருக்கும். அவர் சேவை செய்யாததும் அவர் தொண்டுக்கு இலக்காகாததுமான துறை ஒன்றும் இருந்ததில்லை. மதத்திற்கும், சமூகத்திற்கும், துன்பமும் துர்ப்பாக்கியமும் நிறைந்த இந்திய அரசியலுக்கும் அவர் செய்திருக்கும் சேவை கொஞ்ச நஞ்சமல்ல.

இன்று பாரத தேசத்திற்கே புகழளித்துக் கொண்டிருக்கும் காசி ஹிந்து சர்வ கலாசாலை என்ற பிரமாண்டமான கல்வி ஸ்தாபனம் ஒன்றே பண்டித மாளவியாவின் பெயர் என்றென்றும் நிலை நிற்பதற்குப் போதுமானதாகும்.



வேலை முடிந்தது!

"எனக்கு சாகப் பொழுது இல்லை. இன்னும் நான் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை யெல்லாம் முடித்த பிறகே நான் மரணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்று மாளவியாஜி அடிக்கடி கூறுவது உண்டு. இப்போது அவர் காலமானதிலிருந்து, மாளவியாஜி தாம் நினைத்திருந்த வேலைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டதாக நாம் நிச்சயமாகக் கருதலாம்.

ஆம், அவருடைய வேலைகள் முடிந்தன. பாரத நாடு சுதந்தரத் திருவாசலின் எதிரே நிற்கிறது. மாளவியாஜி தாம் எடுத்துக் கொண்ட காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்து விட்டார். எந்த இலட்சியத்துக்காக அவர் சென்ற ஐம்பது அறுபது வருஷ காலமாக இடை விடாமல் பாடு

பட்டாரோ அந்த இலட்சியம் ஏறக்குறைய ஒருவாறு நிறைவேறி யிருக்கிறது. அவருடைய ஆன்மா பரிபூரண சாந்தியை அடையும் என்பது நிச்சயம்.

நிபுணர்கள் இறக்குமதி

சபாஷ்! பலே பேஷ்! அச்சா! பஹுத் அச்சா!

சென்ற வாரம் மத்திய சட்ட சபையில் ஸ்ரீ கிருஷ்ண தத்த பலிவால் என்ற காங்கிரஸ் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு நம்முடைய உள்நாட்டு மந்திரி சர்தார் வல்லபாய் படேல் அளித்த பதிலைப் பார்த்த இந்திய மக்கள் எல்லோரும் மேற்கண்டவாறு சொல்லி தங்களுடைய சந்தோஷத்தையும் திருப்தியையும் தெரிவித்திருப்பார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவைக் கைப்பற்றியதிலிருந்து இந் நாட்டின் செல்வத்தை அது சுரண்டிக் கொண்டு போனதுமல்லாமல், பிரிட்டனில் ஒரு காரியத்துக்கும் உபயோகமில்லாமல் கிடந்த சோம்பேறிகளையெல்லாம் 'நிபுணர்'கள் என்ற பெயரில் இந்தியாவுக்கு வரவழைத்து அவர்களுக்குக் கொழுத்த சம்பளம் கொடுத்து வந்தது. மேற்படி பதவிகளுக்கு அந்த வெள்ளைக்காரர்களைக் காட்டிலும் எத்தனையோ வகையில் சிறந்த இந்தியர்கள் இருந்த போதிலும் அதிகார வர்க்கம் அவர்களுக்கு அந்தப் பதவியைக் கொடுப்பதே இல்லை. இந்த அநியாயத்தையும் அக்கிரமத்தையும் கண்டித்து நம்முடைய மதிப்பிற்குரிய தலைவர்கள் எல்லோரும் பதினாயிரக் கணக்கான மேடைகளில் பேசியிருக்கிறார்கள். சத்தியமூர்த்தி, புலாபாய் தேசாய் போன்ற பல சட்ட சபை வீரர்கள் மத்திய சட்ட சபையிலே பல முறை தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஒன்றும் முடியவில்லை.

விமோசனம் பிறந்தது!

கடைசியில், இந்த அநியாயத்திற்கும் அக்கிரமத்திற்கும் இப்போது ஒருவகையாக விமோசனம் பிறந்திருக்கிறது. மத்திய சர்க்காரை இந்திய மக்கள் கைப்பற்றிக் கொண்ட பிறகு, அதிலும் சர்தார் வல்லபாய் படேல் உள்நாட்டு மந்திரியான பிறகு இந்த ஓரவஞ்சகத்துக்கு முற்றுப் புள்ளி ஏற்படுவதில் அதிசயம் என்ன இருக்கிறது?

இனிமேல் வெள்ளைக்காரர்களை உத்தியோகத்திற்கு நியமிப்பதென்றால், ஏதாவது தவிர்க்க முடியாத ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில்தான் நியமிக்கப்படுவார்களென்றும், அதுவும் எவ்வளவு குறைந்த காலத்திற்கு அவசியமோ அவ்வளவு குறைந்த காலத்துக்கு மாத்திரமே அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் சர்தார் வல்லபாய் படேல் அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

இது தேச மக்களுக்கு மிக்க சந்தோஷத்தையளிக்கும் என்பதில் சந்தேகம் என்ன?

நிறைவேறட்டும்!

அர்ஜென்டைனாவிலிருந்து சோளம் வந்தது. துருக்கியிலிருந்து கோதுமை வரப்போகிறதாம். இனி கம்பும் கேழ்வரகும் எந்தெந்த தேசங்களிலிருந்து வரப்போகிறதோ என்று நாம் அதிசயப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், நம்முடைய பிரதம மந்திரி பிரகாசம் நாமெல்லாம் மூர்ச்சையுற்றுக் கீழே விழத்தக்க ஒரு செய்தியைச் சொல்லி வைத்திருக்கிறார்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு ஒரு முறை பார்த்தோம், இரு முறை பார்த்தோம். ஊஹூம், மாறுதலே இல்லை. அச்சு எழுத்தில் அழுத்தந் திருத்தமாக இருக்கிறது.

நம்ப முடியாத மேற்படி செய்தி என்னவென்றால், அரிசி ரேஷன் எட்டு அவுன்ஸிலிருந்து உயர்ந்தாலும் உயருமாம்! கனம் பிரகாசம் சொல்லியிருக்கிறார். "இப்போதிருக்கும் எட்டு அவுன்ஸுக்கே ஆபத்து நேராமல் இருந்தால் போதும், பகவானே!" என்று தமிழ் மக்கள் தெய்வத்தை வேண்டிக் கொண்டிருக்கும் போது, "அதெல்லாம் முடியாது. அதற்கு மேலும் சாப்பிட வேண்டியதாக வந்தாலும் வரலாம்!" என்று சொன்னால் அது மூர்ச்சை யுண்டாக்கத் தக்க செய்தி அல்லவா?

சற்றும் எதிர்பாராத இத்தகைய நிலைமை உண்டானதற்குக் காரணம் என்ன? நேச நாட்டு உணவு போர்டு இந்திய மக்களிடம் கருணை கொண்டு ஏராளமான அரிசியை இரவோடு இரவாய் சென்னை நகரத்திலே கொண்டு வந்து இறக்கி விட்டதா?

அல்ல. நம்முடைய மக்களே நம்மைக் காப்பாற்றி யிருக்கிறார்கள். கொஞ்ச

நாளைக்கு முன்னாலே கனம் பிரகாசம் நெல் சாகுபடி செய்பவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அதற்கிணங்க, மேற்படி விவசாயிகள் பெரிய மனதுவைத்து தங்களுடைய தேவைக்கு வேண்டிய 12 அவுன்ஸ் அரிசி போகப் பாக்கியிருந்த அரிசியை சர்க்காருக்கு விற்று விட்டார்கள். இவ்விதம் சர்க்கார் கைக்கு வந்த அரிசி ஏறக்குறைய ஒன்றரை லட்சம் டன்னாகும். இதைத் தவிர, சர்க்காரின் போனஸ் திட்டத்திற்கிணங்க இம்மாதக் கடைசிக்குள் இன்னும் கொஞ்சம் குறுவை நெல் வரும். அத்துடன் மத்திய சர்க்கார் ஒரிஸ்ஸா மூலமாகவும் மத்திய மாகாணங்கள் மூலமாகவும் சென்னைக்கு கொஞ்சம் அரிசி ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

இதெல்லாம் கைக்கு வந்ததும் டிசம்பர் மாத வாக்கில் அரிசி ரேஷனை உயர்த்தலாம் என்று கனம் பிரகாசம் நம்புகிறார். அவருடைய நம்பிக்கை நிறைவேறட்டும்.

ருஷ்யா இணங்குகிறது

கொஞ்ச நாளைக்கு முன்னால் அமெரிக்கா இந்திய இடைக்கால சர்க்காரின் ராஜிய அந்தஸ்தை ஒப்புக்கொண்டு அதனுடன் ஸ்தானிக உறவை ஏற்படுத்திக்கொள்ள இணங்கியிருப்பதைப் பற்றி மகிழ்ச்சி தெரிவித்து எழுதியிருந்தோம். நம்முடைய மகிழ்ச்சி இன்னும் ஒரு மடங்கு அதிகமாகத் தக்க முறையில் இப்போது மற்றொரு சந்தோஷச் செய்தி கிடைத்திருக்கிறது. உலக மகா வல்லரசுகளில் ஒன்றாகவும் இன்றைய உலக அரசியலிலே பிரதம ஸ்தானம் வகித்து வருவதுமான சோவியத் ருஷ்யாவும் இந்தியாவுடன் ராஜிய உறவு ஏற்படுத்திக் கொள்ள இணங்கியிருக்கிறது. இந்தியாவின் அந்தஸ்து உலகத்தில் உயருவதற்கும் சர்வ தேச விவகாரங்களில் இந்தியாவின் பேச்சுக்கு மதிப்பு உண்டாவதற்கும் இது மிக்க உதவியாயிருக்கும்.

★ ★ ★

எனக்கு வேண்டாம்!



மத்திய சர்க்கார் சென்னை மாகாணத்துக்கு அளித்த புதிய ஆலைக் கதிர்களைச்
சென்னைப் பிரகாசம் சர்க்கார் வேண்டாம் என்று மறுதளித்திருக்கிறார்கள்.

அழுகையை நிறுத்தக் கூலி என்ன?

ஒரு ஊரிலே ஒரு மனுஷன் "அழுவதில் நிகரற்றவன்" என்று பிரசித்தி பெற்றிருந்தான். ஆனால் அவன் அழுவதை யாரும் அதிகமாகக் கேட்டதில்லை. "அவன் மட்டும் அழுவதற்கு ஆரம்பித்து விட்டால், அடே அப்பா, பிரமாதந்தான்!" என்று எல்லாரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் எப்படியாவது அவனுடைய அபாரமான அழுகையைக் கேட்டுவிட வேண்டியதுதான் என்று ஒரு பெரிய மனுஷர் தீர்மானித்தார். "அப்பனே! உன்னுடைய அழுகையைக் கொஞ்சம் அவிழ்த்து விடு. பார்க்கலாம்! அதற்காக உனக்கு ஒரு பணம் கொடுக்கிறேன்!" என்றார்.

"ஒரு பணம்" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், இத்தனை நாளாகக் கல்லாயிருந்த மனிதனுக்கு அழுகை எங்கிருந்தோ பொத்துக் கொண்டு வந்தது. விம்மி விம்மி அழுதான். தேம்பித் தேம்பி அழுதான். இடைவிடாமல் மூச்சு விடாமல் அழுதான்.

ஆகா! அந்த அழுகை! எப்பேர்ப்பட்ட அழுகை! அழுகையென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? உலகத்திலேயே இப்படிப்பட்ட அபார அழுகை உண்டா? இந்த அழுகையைக் கேட்டுப் பட்ட மரங்கள் கூடத் துளிர்த்துக் கண்ணீர் விடுமே? செத்த மனுஷர்கள் கூட எழுந்து உட்கார்ந்து முகாரி ராகம் பாடுவார்களே!

இப்பேர்ப்பட்ட அழுகையை உடனே நிறுத்திவிட வேண்டும். இதற்கு மேல் அழுதால் உலகம் தாங்காது என்று எல்லாரும் ஏகோபித்துச் சொன்னார்கள். "ஒரு பணம் கொடுக்கிறேன்" என்று சொல்லி அழுகையை ஆரம்பித்து வைத்த பெரிய மனிதரைக் கூப்பிட்டு, "தயவு செய்து இவனுடைய அழுகையை நிறுத்துங்கள்!" என்றார்கள்.

அதற்குள்ளே, அந்தப் பெரிய மனிதருக்கும் "ஏன் இதை ஆரம்பித்து வைத்தோம்?" என்று தோன்றிப் போயிருந்தது. எப்படியாவது அழுகையை நிறுத்தினால் போதும் என்று ஆகிவிட்டது. அழுகைக்காரனிடம் போய், "அப்பனே! போதும்! நிறுத்து!" என்றார். அவன் நிறுத்தவில்லை. "நான் கொடுத்த ஒரு பணத்துக்கு இவ்வளவு அழுகையே போதும்; நிறுத்து!" என்றார். அவன் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. "அப்பனே! உனக்குப் புண்ணியமாகப் போகட்டும்; தயவு செய்து அழுகையை நிறுத்து!" என்றார். பிரயோஜனப்படவில்லை.

"அழுவதற்கு ஒரு பணம் கொடுத்தேன் அல்லவா? அழுகையை நிறுத்த இன்னொரு பணம் தருகிறேன்!" என்றார். அதைக் கேட்டதும் அந்த மனிதனுடைய அழுகை இன்னும் அதிகமாயிற்று.

"இல்லை, இல்லை! அழுகையை நிறுத்த இரண்டு பணம் தருகிறேன், வாங்கிக்கொண்டு நிறுத்து!" என்றார்.

அது அந்த மனிதனுடைய காதில் விழுந்தது. கையை நீட்டினான். இரண்டு பணத்தை வாங்கிக் கொண்டான். மேலும் தேம்பித் தேம்பி வெகு பலமாக அழத் தொடங்கினான்.

இரண்டு பணம் நாலு பணம் ஆயிற்று; பத்து பணம் ஆயிற்று. அப்படியும் அழுகை நிற்கவில்லை.

அதோடு போயிற்றா? அழுவதற்கும் அழுகையை நிறுத்துவதற்கும் பணம் கிடைக்கிறது என்று தெரிந்து கொண்டு அந்த அழுகைக்காரனோடு சேர்ந்து இன்னும் பலரும் அழத் தொடங்கி விட்டார்கள்!

அந்த மாபெரும் அழுகையைக் கேட்டவர்களால் சகிக்கவே முடியவில்லை.

அதை எப்படியாவது நிறுத்தினால் போதுமென்று ஆகிவிட்டது.

அழுகையை ஆரம்பித்து வைத்த புண்ணியவானை அநேகர் குடைந்தார்கள். அவர் கையைப் பிசைந்து கொண்டு "நான் என்ன செய்வேன்? எனக்குந்தான் பொறுக்கவில்லை! யாராவது நிறுத்துங்கள்! உங்களுக்குப் புண்ணியம் உண்டு!" என்றார்.

தனித்தனியாகவும் கோஷ்டிகோஷ்டியாகவும் பெரிய பெரிய மனிதர்கள் சென்று அழுகையை நிறுத்தப் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள். ஆனாலும் இலேசில் முடிகிற காரியமாயில்லை. ஓரிடத்தில் அழுகை நின்றால், இன்னோரிடத்தில் பொத்துக் கொண்டு கிளம்பிற்று!

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். முதன் முதலில் அழுகையை ஆரம்பித்து வைத்த மகா புத்திசாலி. இம்மென்று அவரும் அழத் தொடங்கினார்! ஓ வென்று ஒரு குரல் அழுது ஒப்பாரியும் வைத்த பிறகுதான் அவருடைய மனம் நிம்மதி அடைந்தது!

ஜனாப் ஜின்னா சாகிபு கடைசியாக வெளியிட்டிருக்கும் அலங்கோல அறிக்கை மேலே கண்ட கதையின் இலட்சணமாகத்தான் இருக்கிறது.

* * *

முக்கியமாக பீஹாரில் நடந்த பயங்கர சம்பவங்களை முன்னிட்டுத் தான் ஜனாப் ஜின்னா மேற் சொன்ன அறிக்கையை விடுத்திருக்கிறார். அந்தப் பயங்கர சம்பவங்கள் அவருடைய மனதை ரொம்பவும் கலவரப்படுத்தி யிருக்கின்றன. அந்தக் கலவரத்தின் காரணமாக அவருக்கு மலை கடுகாகத் தோன்றுகிறது; கடுகு மலையாகக் காண்கிறது. இன்னும் அவருக்குப் பல விஷயங்கள் மறந்து விட்டதாகவும் காணப்படுகிறது. எல்லா பயங்கர சம்பவங்களுக்கும் மூல காரணம் தம்முடைய 'நேரடி நடவடிக்கை' யோசனைதான் என்பதை அவர் மறந்து விடுகிறார். கல்கத்தா அவர் கண்ணுக்கே புலப்படவில்லை. கிழக்கு வங்காளம் இருப்பதாக அவருக்கு ஞாபகம் இல்லவே இல்லை. நவகாளிப் பிரதேசத்தில் நடந்த கேட்கச் சகிக்காத அட்டூழியங்களைப் பற்றி வெளியாகி வரும் விவரங்கள் அவர் கண்ணில் படுவதே இல்லைபோல் தோன்றுகிறது.

அப்படிக் கண்ணில் பட்டாலும் அவை யெல்லாம் அவருக்கு அணுவளவாகத் தோன்றுகின்றன. 'பீஹார் பயங்கரங்களை நோக்கும் போது மற்றவை யெல்லாம் அணுவுக்குச் சமானம்!'' என்று சொல்கிறார்.

ஜனாப் ஜின்னா பீஹாருக்கும் போகவில்லை; கல்கத்தா அல்லது கிழக்கு வங்காளத்துக்கும் போகவில்லை. டில்லியி லிருந்தபடியேதான் இதை யெல்லாம் சொல்கிறார். சொல்லி விட்டு, பெரும்பான்மை முஸ்லிம்கள் உள்ள மாகாணங்களுக்கு ஒரு உபதேசமும் சொல்கிறார்.

''பழிக்குப்பழி வாங்குவதில் இறங்கி விட வேண்டாம்; இறங்கினால், உங்களுக்கு பாகிஸ்தான் கிடைக்கவே கிடைக்காது!'' என்று பெரிய போடாகப் போட்டிருக்கிறார்.

துரதிர்ஷ்டவசமாக ஜனாப் ஜின்னா ரொம்பவும் காலப் பிற்பாடாக இந்த எச்சரிக்கையைச் செய்திருக்கிறார் என்பதைச் சொல்லவேண்டி யிருக்கிறது.

ஏற்கெனவே கல்கத்தாவிலேயே பாகிஸ்தானுக்குச் சாவுமணி அடிக்கிறது என்பதை நாம் எடுத்துக் காட்டினோம். பிற்பாடு அதே சாவுமணி கிழக்கு வங்காளத்தில் அதி பயங்கரச் சத்தத்துடனே அடித்தது. அப்போதெல்லாம் ஜனாப் ஜின்னா காதிலே பஞ்சை அடைத்துக்கொண்டு சும்மா இருந்து விட்டார். இப்போது திடீரென்று ஏகப் பரபரப்பை அடைந்து 'ஓஹோ! பாகிஸ்தானுக்கு ஆபத்து வந்துவிடும்!'' என்கிறார்.

ஜனாப் ஜின்னாவின் புதிய பரபரப்பில், அவர் சில முக்கிய விஷயங்களை மறந்து விட்டார்:—(1) வங்காளம், முஸ்லிம்கள் பெரும்பாலோராயுள்ள மாகாணம்: (2) அது தனிப்பட்ட கலப்பற்ற முஸ்லிம் லீக் ஆட்சியில் இருந்து வருகிறது; (3) கலவரங்களும் பயங்கர சம்பவங்களும் அந்த மாகாணத்திலேதான் ஆரம்பமாயின; (4) மேற்படி கலவரங்களை அடக்குவதில் சுஹ்ராவர்த்தியின் முஸ்லிம் லீக் சர்க்கார் அவ்வளவு தீவிரமும் உற்சாகமும் காட்டவில்லை.

மேற்படி முக்கிய விஷயங்களை ஜனாப் ஜின்னா மறந்துதான் விட்டாரா, அல்லது வேண்டுமென்றே மறைக்கவும் குறைக்கவும் பார்க்கிறாரா என்பது தெரியவில்லை. எப்படி யிருந்தாலும் பெரிய பிசகு செய்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

* * *

பீஹார் பயங்கரங்களைப் பற்றி இமயமலையை விடப் பிரம்மாண்டமானவை என்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். அப்படிப்பட்ட பிரம்மாண்டமான கலகத்தை ஒரே வாரத்தில் அடக்கி விட்டார்கள். பீஹார் காங்கிரஸ் சர்க்கார் மிகத் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டதாலும், ஜவாஹர்லால் நேரு ராஜேந்திர பிரஸாத் முதலியவர்கள் உடனே அம் மாகாணத்துக்கு விரைந்து சென்று நடவடிக்கைகளை நேரில் கவனித்ததாலும் அது சாத்தியமாயிற்று.

இத்துடன் கிழக்கு வங்காளத்தில் கலகம் அடக்கப்பட்ட இலட்சணத்தை ஒப்பிடாமல் இருக்க முடியாது. எத்தனை சாவகாசமாக அங்கே காரி

யங்கள் நடந்தன? பயங்கர நிகழ்ச்சிகள் எத்தனை நாள் நீடித்தன? கிழக்கு வங்காளத்தில் பயங்கர சம்பவம் ஆரம்பித்ததும் முக்கிய முஸ்லிம் லீக் தலைவர்கள் அங்கே யாராவது விரைந்து போனார்களா? ஜனாப் ஜின்னா உடனே அவ்விடம் நேரில் சென்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? இப்போது பிஹாருக்குக் கோஷ்டி கோஷ்டியாகச் செல்லும் முஸ்லிம் லீக் தலைவர்கள் முன்னே கிழக்கு வங்காளத்துக்கு ஏன் போகவில்லை?

* * *

முஸ்லிம் லீக்கிலேயும் தயக்கமின்றி மூடி மறைக்காமல் உண்மையைப் பேசக்கூடிய ஒருவர் இருவர் இருக்கிறார்கள் என்பது நமக்கு அளவற்ற திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. பிகார் மாகாணத்தில் மாங்கிர் ஜில்லாவைச் சேர்ந்த முஸ்லிம் லீக் காரியதரிசி டாக்டர் ஸையத் மாலிக் முஹம்மது என்பவர் ஜனாப் ஜின்னாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், ''வங்காளத்து அட்டூழியங்களைத் தயவு செய்து நிறுத்துங்கள். அதுதான் பிஹார் முஸ்லிம்களுக்கு நீங்கள் செய்யக் கூடிய பெரிய உபகாரம்!'' என்கிறார். அதோடு ''ஜனாப் கஸ்னவர் அலிகானின் பொறுப்பற்ற பேச்சுக்களைப் போன்ற பேச்சுக்களை நிறுத்துங்கள்! பெரிய புண்ணியமாயிருக்கும்!'' என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜனாப் கஸ்னவர் அலிகான் அப்படி என்ன பேசினார் தெரியுமல்லவா? வேறு ஒன்றும் இல்லை. ''இந்தியாவிலுள்ள முப்பது கோடி ஹிந்துக்களும் முஸ்லிம்களாகி விடவேண்டும்'' என்னும் தமது மனமார்ந்த ஆசையைத் தெரிவித்தார்! இதை எப்பொழுது சொன்னார், தெரியுமா? கிழக்கு வங்காளத்திலிருந்து பலாத்கார மதமாற்றச் செய்திகள் வந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேதான்!!

ஜனாப் கஸ்னவர் அலிகான் இலேசுப்பட்டவர் அல்ல. முஸ்லிம் லீக்கின் மிகப் பிரபல தலைவர்களில் ஒருவர்: இப்போது தேசீய இடைக்கால சர்க்காரிலும் லீக் பிரதிநிதியாகப் பதவி வகிப்பவர்.

அவர் அம்மாதிரி பேசியதினால், ''பலாத்கார மதமாற்றம் முஸ்லிம் லீக்கின் வேலைத் திட்டங்களில் ஒன்று என்பதாக பிஹார் ஹிந்துக்களிடையே ஒரு நம்பிக்கை பரவியிருக்கிறது'' என்று மேற்படி டாக்டர் ஸையது முகமது கூறுகிறார்.

சத்தியமான வார்த்தை. அந்த மாதிரி நம்பிக்கை வடநாட்டில் பெரும்பாலான ஹிந்துக்களிடையே பரவித்தான் இருக்கிறது; அது அவர்களிடையே கவலையையும் பயத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

தேசத்தின் வருங்கால க்ஷேமத்துக்கு இந்த நிலைமை உகந்ததல்ல; முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் இலட்சியத்துக்கும் அநுகூலமானதல்ல.

கிழக்கு வங்காளத்திலும் பிஹாரிலும் தற்போதைக்கு அமைதி நிலைநாட்டப்பட்டால் மட்டும் போதாது. அங்கேயெல்லாம் உள்ள ஹிந்துக்களுடைய மனதிலும் அமைதி ஏற்பட வேண்டும்.

அதற்கு முஸ்லிம் லீக் தலைவர்கள் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

பலாத்கார மதமாற்றத்தை அவர்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

கண்டிப்பது மட்டும் போதாது.

நிர்ப்பந்தத்தினால் முஸ்லிம் மதத்துக்கு மாற்றப்பட்டவர்களைத் திரும்பவும் பழைய மதத்தில் சேர்ப்பதற்கு முஸ்லிம் லீக் தலைவர்களே முன் வந்து வேலை செய்ய வேண்டும்.

இதற்காக ஏற்படும் பணச் செலவுக்காக முஸ்லிம் லீக்கினர் உடனே பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்து அதைப் பகிரங்கப் படுத்தவேண்டும்.

நிர்ப்பந்த மதமாற்றத்தை முஸ்லிம் லீக் தலைவர்கள் விரும்பவில்லை என்பதை அப்போதுதான் முஸ்லிம் பாமர மக்கள் நிச்சயமாக உணர்ந்து கொள்வார்கள்.

இது சம்பந்தமாக ஹிந்து பாமர மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள கவலையும் அப்போதுதான் நீங்கும்.

முஸ்லிம் லீக் தலைவர்களின் பொறுப்பற்ற அடாவடிப் பிரசாரத்தினால் தேசத்தில் நேர்ந்திருக்கும் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்குப் பரிகாரமாகக் குறைந்த பட்சம் இவ்வளவாவது அவர்கள் செய்யவேண்டும்.

இல்லாதவரையில் தேசத்தில் சந்தேகமும் மனக்கசப்பும் துவேஷமும் வெறுப்பும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுதானிருக்கும்.

ஜனாப் ஜின்னாவின் உண்மையை மறுப்பும் அறிக்கைகளினால் நிலைமையில் அதிகமான அபிவிருத்தி ஏற்பட்டு விடாது.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

நமது ராகங்களில் நாட்டக்குறிஞ்சிக்கு ஒரு பிரத்தியேக அழகும் மகிமையும் உண்டு. இக்காலத்தில் மாத்திரமல்ல, பண்டைக்காலத்திலேயே வெகு கலைக்காய்ச் சுருதி அமைந்து வகுத்து இசைந்து வைத்த தமிழ்ப் பண் முறையிலேயே அது 'நட்டபாடை' என்ற பெயருடன் வசீகர வடிவம் கொண்டு இலங்கி வந்தது. அதனால்தான் அக்கால முறைக்கும், இக்காலப் பாணிக்கும் வித்தியாசமில்லாது, இந்த ராகம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாகச் சிதைவுறாதபடி எழிலுடன் நிலைத்து நிற்கின்றது. இந்த அதிசயத்தை நவம்பர் 1ல 'நமது சங்கீதம்' என்று டி. கே. ஜயராமய்யர் தயாரித்த விமரிசனத்தில் திருச்சி நிலையத்தார் நிரூபித்தார்கள். இந்த ராகத்துக்குப் பஞ்சமம் முற்றிலும், ரிஷபம் அவரோஹணத்திலும் வர்ஜ்யம். ஆனால் அந்த ஸ்வரங்களை அல்பத்துவமாய்க் கொடுக்கும் சாலக்கிறுதும், வக்ரப் பிடிப்புகளாலும் இந்த ராகம் தனியழகு கொண்டு விளங்குகிற தென்பர் விமரிசகர். வி. சங்கரலிங்கம் பிள்ளை தமிழ்ப் பண் நட்டபாடையைப் பாடினார். தஞ்சை சிவானந்தம் பிள்ளை வீணையிலும், ஜி. என். பாலசுப்பிரமணியம் வாய்ப்பாட்டிலும் நாட்டக்குறிஞ்சியை வழங்கினார்கள். அதற்குச் சுமாரான ஒற்றுமையுள்ள வட நாட்டு பாகேச்வரி, ரவிசங்கர் மிச்ராவின் ஒலிப்பதிவு மூலம் விளக்கப்பட்டது. அக்டோபர் 13ல கல்கி வான சஞ்சாரத்தில், தமிழ்ப் பண் உருவங்களின் உண்மைக்குப் போதிய ஆதாரமுண்டா என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். அவைகள் திருவாவடுதுறை ஆதீனம், சிதம்பரம் கோவில் முதலிய இடங்களில் தொன்று தொட்டுக் குருசிஷ்யப் பரம்பரையாய் வந்திருப்பதால் சந்தேகத்திற்கிடமில்லை என்று விமரிசகர் விடையளித்தது கவனிக்கத் தக்கது. ஆகஸ்டு 25ல கல்கி இதழில் ஜி. என். பி.யின் நாட்டக்குறிஞ்சி விசேஷ எழில் கொண்டிருந்தது என்ற குறிப்பிற்கேற்ப, அவரே அன்று அதை நிதர்சனம் செய்ததும் பாராட்டத் தக்கது.

* * *

ஆழ்ந்த ஞானமும் வெகுகால அனுபவமும் கொண்டு, பல லக்ஷணப் பொருத்தங்களுடன் சளையாது உழைத்துப் பாடிச் சங்கீதத்தை உயர்தரமாய் விளக்கிக் காட்டும் வல்லமையுடையவர், வீணை வித்வான் முடிகொண்டான் வெங்கடராமய்யர். 7ல திருச்சியில் நிகழ்ந்த அவரது முழுநேரக் கச்சேரியில் மந்தர ஸ்தாயியிலிருந்து வெகு நிதானமாயும், நீண்ட கார்வைகளுடனும் தோடி ஆலாபனை செய்யத் தொடங்கியதிலிருந்தே சுருதி சுத்தமாய்க் கச்சேரி களைகட்டி விட்டது. அடாணாவை இடம் இடமாய் இழைத்துத் தெளிவாய் வழங்கினார். பைரவியை சௌக்க இழுத்து விஸ்தாரமாய்ப் பாடினார். பல இடங்களில் உருக்கமாயிருந்தது. உருப்படிகளெல்லாம் அபூர்வமாயும் பெரிதாயும் இருந்தன.

அதே மாதிரி 10ல சென்னையின் ஒரு மணி நேரம் எம். நீலகண்டய்யர் பாடிய கச்சேரியில் 'மஹாசுகரம்' என்ற தியாகர் கிருதியின் ராகம் 'சாமா' என்று வானொலியில் குறிப்பிட்டு 'சாமம்' என்று அறிவிக்கப்பட்டது. இது வெங்கடமகியால் கொடுக்கப்பட்ட பழைய பெயர். கேட்டது ஷண்முகப்ரியா. இப் பாடகர் ஞானச் சிறப்பும் போற்றத் தக்க வழியும் கொண்டவர். மோஹனம், பந்துவராளி ராகங்கள் வசீகரமாயிருந்தன. நீலாம்பரி உருப்படியின் ஸ்வரப்ரஸ்தாரம் பெருவாயிருந்தது.

10ல சென்னையில் வீணைக் கச்சேரி செய்த தேவகோட்டை நாராயணய்யங்கார், புகழ் சிறந்த காரைக்குடி சாம்பசிவ அய்யரின் சிஷ்யர். அதற்கேற்ப அவரது வாசிப்பும் உயர்ந்த ரகமாயிருந்தது. ஸாரங்கா, கௌளை இவையோடு பைரவியை விஸ்தாரமாயும் கமகப் பொழிவுடனும் இழைத்தார். சாதாரணமாய் 'ஏகமாட' கிருதி ஹரிகாம்போதியில் பாடப்படுவது வழக்கம். அன்று அவர் கமாஸை ஆலாபனை செய்து கிருதியையும் அதில் அமைத்தது ஒரு பிரச்னைக்கு இடம் கொடுத்தது. இந்த வைணிகரின் முதல் குருவான கோட்டு வாத்தியம் சகாராமராவின் பாடாந்தர மென்றும் தெரியவருகிறது.

11ல திருச்சியில் நடந்த திருப்பாம்புரம் ஸ்வாமிநாதப்பிள்ளையின் வேணுகானம் வழக்கம்போல் சம்பிரதாய முறையில் அமைந்திருந்தது. தர்பார், கல்யாணி, சங்கராபரணம் இவையோடு விலாஸினி, வேளாவளி என்ற அபூர்வ ராகங்களையும் விளக்கியது போற்றத் தக்கது.

* * *

திருச்சியிலிருந்து 6ல கேட்ட பி. கே. விசுவநாத சர்மாவின் வயலின் வாத்தியம் நயமாயிருந்தது. சுருதி சுத்தமும் நாத புஷ்டியும் கொண்டு, சுகமாய்க் காம்போதி, ஆரபி, நடநாராயணி ராகங்களையும் உருப்படிகளையும் கையாண்டார்.

8ல சென்னையில் பாடிய பிரதாபம் நடேசனுக்குக் கன சாரீரம். மலய மாருதம், உதயரவிச்சந்திரிகா ராகங்கள் அவரது தேர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டின.

9ல சென்னையில் ருக்மணி சௌந்தரராஜனது கானத்தில் சாவேரி, பந்துவராளி ராகங்களும், 'நீதாபுலேகா' கிருதியில் விழுந்த நிரவல் ஸ்வரங்களும் கவனத்தை யிழுத்தன.

10ல திருச்சியில் சாவித்திரி கணேசன் நல்ல தேர்ச்சியுடன் சரளமாய்ப் பாடினார். சில இடங்களில் ஸ்ரீ மதுரை மணி அய்யரின் வழி பிரதிபலித்தது. ஸிம்மேந்திர மத்யமம், மோஹனம், லதாங்கி ராகங்கள் நற் சித்திரங்களாய் விளங்கின.

11ல சென்னையில் எஸ். அனந்த கோபாலனின் பாட்டு கவனத்தைக் கவர்ந்தது. அவர் தோடி, பந்துவராளி முதலிய ராகங்களையும் உருப்படிகளையும் கையாண்டது மிகவும் நயமாயிருந்தது.

கண்ணீர் விடுகிறார்!

விசரன்

சக்ரவர்த்தி ஆட்சியிலே சோகக் கதையடா!—கேட்டுத்
துயரக் கண்ணீர் பெருக்குதிந்த உலகம் பாரடா!
போதாதற்குக் கவர்னர் பர்ரோஸ் துரையின் ஆட்சியாம்!—அவர்
போக்கைச் சொன்னால் வேலிக்கங்கே ஓணான் சாட்சியாம்!

'டயரெக்ட் ஆக்ஷன்' என்று ஏதோ உளறிப்பிட்டாங்க—அதை
டம்பமாக மேடை மீதே கிளறி விட்டாங்க!
துயரக் காட்சிச் செடிகளைப் படிக்க விட்டாங்க—இப்போ
தொத்து நோயைப் போல விதை மூத்த விட்டாங்க!

கால நமன்' ஆட்டம் முதலில் கல்கத்தாவிலே—அப்பால்
கடந்து பம்பாய் நகரம் வந்தான் ஒரே நாளிலே
வாலை வெட்ட கல்கத்தாவில் வாபஸ் வாங்கினான்—இப்போ
வஞ்சம் தீர்க்கப் பீஹார் நோக்கி வாலை நீட்டினான்!

குழந்தை குஞ்சு பெண்டிர் தம்மைக் கொன்று மடிக்கிறார்—இந்தக்
கோரக் காட்சி களைமகிழ்ந்து போட்டோ பிடிக்கிறார்!
இழந்த உயிர்களெத்தனையோ இன்னுந் தெரியலே!—ஒன்றும்
இல்லையென்று ஏமாத்துற தேனோ புரியலே!

காய்தே ஆஜம் ஜின்னா சாஹிப் கவலைப் படுகிறார்—அணை
கடந்த வெள்ளங் கண்டு சோகக் கண்ணீர் விடுகிறார்!
பாயும் ரத்தம் சோதரர்க்குள் பார்க்கச் சகிக்கலே—அதைப்
பார்த்துச் சும்மா காந்திஜிக்கு இருக்கப் பிடிக்கலே!



8-11-46 அன்று எட்டயபுரம் மகாராஜா அவர்களின் பிறந்தினக் கொண்டாட்டம் மேற்படி சமஸ்தானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அது சமயம் மகாராஜா அவர்கள் உள்ளூர் காந்தி சேவா சங்கத்துக்கு 300 கைராட்டைகளை நன்கொடையாக வழங்கினார். மகாராஜாவையும், காந்தி சேவா சங்க ஊழியர்கள் கைராட்டைகளுடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



பாவம், பார்வதி!

எம். ஆர். ராஜகோபாலன்

பார்வதிக்கு நினைக்க நினைக்கத் துக்கம் தொண்டையை அடைத்தது. பெற்ற தாயாரை விடப் பெருமையாகத் தன்னை வைத்துக்கொண்டிருந்த அவன் மாமியார் பர்வதம் இப்படி மூன்றே நாளில் தாடகையாகவும், சூர்ப்பனகையாகவும் மாறி விடுவாள் என்று அவளால் நினைக்கவே முடியவில்லை. தான் ரொம்பவும் அதிர்ஷ்டக்காரி என்று பெருமை கொண்டிருந்த அவள் மனம் வேதனையால் தவித்தது. தன் மேல் துரும்பு பட்டாலும் சகிக்காத மாமியார், இன்று அவளை அடிக்கவும் மிரட்டவும் அவள் கணவனிடம் சொல்லிக் கொடுக்கிறாள். அதுவும், அவள் எட்டு மாதம் தலைச்சனை வயிற்றில் உண்டாயிருக்கும் போது. அப்படிப்பட்ட பெரிய தவறு அவள் என்ன செய்து விட்டாள்!

மூன்று நாளாகவே அவளுக்கும் மாமியாருக்கும் கொஞ்சம் சௌஜன்யக் குறைவுதான். மத்தியானம், பிரசவத்திற்குப் பிறந்தகம் போவதைப் பற்றிப் பேச்சு வந்தது. எல்லா மாமியாரையும் போல் பர்வதம், பார்வதியின் பிறந்தகத்தை ஒரு படி இறக்கியே பேசினாள். இது பார்வதிக்குப் பொறுக்கவில்லை. வெடுக்கென்று நாலு வார்த்தையைக் கொட்டி விட்டாள். அவ்வளவுதான்; அது அத்துடன் போய்விட்டது என்று எண்ணியிருந்தாள்.

ஆனால் சாயங்காலம் அவள் பாத்திரங்களை அலம்பி உள்ளே வைத்துக்கொண்டிருந்த சமயம், அவள் மாமியாரும், அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வந்திருந்த அவள் கணவன் சங்கரனும் கூடத்தில் பேசுவது காதில் விழுந்தது. நடு நடுவில் அவள் பெயரும் அடிபட்டது. தன்னைப் பற்றித்தான் ஏதாவது புகாராக இருக்கவேண்டுமென்று கதவோரத்தில் நின்று காது கொடுத்துக் கேட்டாள். பின்னையும் அம்மாவும் பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்.

"உங்கப்பா உன்னைப்போல இருக்கும் போது எப்படியெல்லாம் இருப்பார் தெரியுமா? அதென்னவோ அப்பா, இந்தக் காலத்துப் பிள்ளைகளெல்லாம் தலைகீழாய்த்தான் நிற்கிறதுகள்!" என்றாள் பர்வதம்.

"என்னை என்ன செய்யச் சொல்றே? அப்பா மாதிரியே எல்லோருமே இருக்க முடியுமா, அம்மா? காலையில் எழுந்திருந்தால், ஆபீஸுக்குப் போறத்துக்கும் ஆத்துக்கு வருவதற்குந்தானே சரியாயிருக்கு? இதெல்லாம் யாராலே கவனிக்க முடியறது?"

"நன்னாச் சொன்னே, ரெண்டு அடி அடிச்சு ஒரு அலசு அலசறத்துக்கு என்னமோ இப்படிப் பிரமாதப் படுத்தறியே? இப்படியே விட்டுட்டா நாளைக்கு உனக்குத்தானே கஷ்டம்? அப்புறம் அம்மா சொன்னத்தை அப்பவே கேக்காமற் போனேனேன்னு நீதான் வருத்தப் படப் போறே! கட்டினவன், நீதானேடா? இதுக்குக் கையாலாகாதவன் வேறென்னத்தைச் செய்யப்போறே?"

"சரி, சத்தம் போடாதே, அம்மா! அவள் உள்ளே வரட்டும். நீ சொன்ன காரியத்தை முதலிலே செய்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்!" என்றான் சங்கரன்.

இதற்குமேல் பார்வதியால் அங்கு நிற்க முடியவில்லை. அழுகை அவளையும் மீறிக்கொண்டு வந்தது. நேராகத் தன் அறைக்குப் போய்ப் படுக்கையில் பொத்தென்று விழுந்து விட்டாள்.

2

மணி எட்டடித்தது. சங்கரன் தன் காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு சாப்பிடச் சென்றான்.

"எங்கே அம்மா, பாருவைக் காணவே காணோம்! நான் ஆபீஸிலிருந்து வந்ததிலிருந்து அவளைப் பார்க்கவேயில்லையே!" என்றான்.

"தன்னவேன்னு உள்ளே போய்ப் படுத்திண்டிருக்காளோ, என்னமோ! அவளைப் போய்க் கஷ்டப்படுத்தாதே! இன்னிக்கு நானே சாதம் போடறேன் வா!" என்றாள் பர்வதம்.

சங்கரன் சாப்பிட்டு விட்டு ஆபிசேரில் சாய்ந்தான். பர்வதம், பார்வதிக்காகக் காத்துக்கொண்டிருந்தாள்.

"சங்கரா! கொஞ்சம் அவளை எழுந்திருந்து சாப்பிட வரச்சொல்லேன். வயிறும் பிள்ளையுமா ரொம்ப நாழி பட்டினி கிடக்கப் படாது!" என்றாள்.

இது பார்வதி காதில் விழுந்தது. "ஆமாம்! கரிசனம் கண்ணுக்குள்ளே, வஞ்சனை நெஞ்சுக்குள்ளே!" என்று தனக்குள் முனகிக் கொண்டாள்.

அப்பொழுதுதான் நினைத்துக்கொண்டவன்போல் சங்கரன் ஒரு துள்ளுத் துள்ளிப் பார்வதியின் அறைக்குப் போனான். கதவு திறக்க முடியவில்லை. உள்ளே விம்மல் சத்தம் வேறு கேட்டது.

மெதுவாகப் 'பாரு!' என்றான். பதில் இல்லை.

மறுபடியும் "பார்வதி!" என்றான். பேச்சு மூச்சே இல்லை.

கதவை இரண்டு இடி இடித்தான். கதவு திறந்துகொண்டது.

உள்ளே பார்வதி அழுகை வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்தாள். சங்கரன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"இதென்ன, பாரு? எதுக்காக இப்படி அழுதிண்டிருக்கே? என்ன விஷயம்? உள்ளே அம்மா உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாளே!" என்றான் சங்கரன்.

"எனக்கொன்றும் சாப்பாடு வேண்டாம். நாளைக்கே என்னை ஊரிலே கொண்டு போய் விட்டு விடுங்கோ! இனிமே ஒரு நாழிகூட என்னாலே இங்கே இருக்க முடியாது" என்றாள் பார்வதி.

"எதுக்கு இப்படியெல்லாம் பேசறாய்? நீ ஏதோ அலுப்பாய்ப் படுத்துக் கொண்டு இருக்கிறாயோ என்னமோ என்று நான் இத்தனை நாழிகையாக உன்னைப் பார்க்க வராமல் இருந்தேன். என்ன விஷயம் நடந்ததுன்னு என்னிடம் சொல்லேன்!" என்று அவள் தலையைக் கோதிக்கொண்டே கேட்டான்.


"என்ன விஷயமா, ஒன்றுமே தெரியாதுபோலக் கேட்கிறேளே! நீங்கள் பேசின விஷயம் உங்களுக்கே ஞாபகமில்லை போலிருக்கு! உங்கம்மா உங்களிடம் என்னை ரெண்டு அடி அடிக்க அலக அலகன்னு அலசச் சொன்னதும், அதுக்கு நீங்க, நான் உள்ளே வந்ததும் அப்படியே செய்யறதாக ஒப்புக்கொண்டதும் மறந்து விட்டீர்களாக்கும்!" என்று சொல்லி, மறுபடியும் விசித்தாள் பார்வதி.

சங்கரன் இதைக் கேட்டானோ இல்லையோ, அப்படியே விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான். "அம்மா, உன் மாட்டுப் பெண்ணைக் கொஞ்சம் இங்கே வந்து பாரேன்! சாயங்காலம் நானும் நீயும் பேசினதை வைத்துக் கொண்டு இங்கே அழுது வடிந்து கொண்டிருக்கிறாள்! நீ இங்கே வந்து விஷயத்தைக் கொஞ்சம் சொல்லேன்" என்றான். இதற்குள் பர்வதமும் சமாசாரத்தைத் தெரிந்து கொண்டு அங்கே வந்து விட்டாள். பார்வதி கண்ணீருடன் நிற்பதைப் பார்க்க அவளுக்குச் சகிக்கவில்லை.

"அட பாவமே! நீ எனக்கு ஒரே மாட்டுப் பெண்ணு; எல்லாம் கிடக்க உன்னை ஏதுக்குடி நான் அடிக்கச் சொல்லப் போறேன்! அசடாட்டமா எதையோ அரைகுறையா காதிலே வாங்கிண்டு மனசைப் புண்ணாக அடிச்சுண்டிட்டியே! இது உன் உடம்புக்கு ஆகாதே, அம்மா! சங்கரன் கட்டிக் கொண்டு அவிழ்த்துப் போட்ட வேஷ்டி மூணு நாளா அப்படியே தோய்க்காமல் கிடக்கே, வயிறும் பிள்ளையுமா இருக்கும் உன்னாலேயும் ஆகாது, வயசான என்னாலேயும் ஆகாது என்று அவளை ரெண்டு அடி அடிக்க அலசிப்போடச் சொன்னேன்! அவர் அதுக்கா இப்படிப் பண்ணுவா? சரி, பட்டினி கிடக்கப் படாது, சாப்பிட வா!" என்று பார்வதியை அன்போடு இழுத்து அணைத்துக் கொண்டாள்.

பார்வதியும் துக்கக் கண்ணீர் உகுப்பதை விடுத்து இன்பக் கண்ணீருடன் சாப்பிட எழுந்தாள்.


கோகிலகான இசைவாணி
ஸ்ரீமதி எம். எஸ். ஸுப்புலக்ஷ்மி
பாடிய
புதிய இசைத் தட்டு!
N.18300
வண்டாடும் சோலை
2 பாகங்கள்
(ஹரிகாம்போஜி)
"HIS MASTER'S VOICE"
எல்லா அத்தாட்சி பெற்ற
வியாபாரிகளிடமும் கிடைக்கும்
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"



மனம்போல் மாங்கல்யம்

பி. ஸ்ரீனிவாஸன்

'வெந்து ரிக்ஷா'வை இழுத்துக் கொண்டு சாவதானமாக நடந்து வந்தான் சாமிக்கண்ணு. ஆனாலும் அவனுக்கு ஒரே உற்சாகமாய் இருந்தது.

அதற்கு முதற் காரணம் அரையணாவும் காலணாவுமாய் மடி நிறைய இருந்த இரண்டு ரூபாய் பணம். அதை அவன் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். "ஏ, சாமிக்கண்ணு! உன் பாடு யோகம்டா!" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு பூரித்துப் போனான்.

அதோடு, அவன் புத்தம் புதிய — கம்பெனி 'யாரின் முத்திரை அழியாத — முண்டா பாடி' ஒன்று அணிந்து கொண்டிருந்தான். அதைத் தடவித் தடவி அதன் மெல்லிய ஸ்பரிசத்தைக் கண்ணை மூடிக் கொண்டு அனுபவித்தான்.

வழியில் சிந்தாதிரிப்பேட்டை கள்ளுக் கடையில் அவன் 'லிமிட்'டாகக் குடித்திருந்த கள்ளும் அவனுடைய உற்சாகத்துக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

"ஸார்! ரிக்ஷா, ஸார்!" என்று அவன் பாதசாரிகளான 'ஸார்'களைக் கூவிக் கூவி அழைத்தான். வேக வெறி பிடித்த நகரவாசிகள் 'பஸ்'களிலும் 'டிராம்'களிலும் முண்டியடித்து ஏறிக்கொண்டிருந்தனரே தவிர, சாமிக்கண்ணுவின் ரிக்ஷாவைக் கவனிக்கவில்லை.

அவன் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு முன்னால் ஒரு தரம் வளையமாகச் சுற்றி வந்தான். சாயம் பூசிய சப்பை வாய், பவுடர் அப்பிய வதனம், கத்தரித்த கூந்தல், கையில் பை, முழங் காலுக்கு மேல் கவுன், குதியங்கால் உயர்ந்த பூட்ஸ் ஆகிய அலங்கா ரதிகளுடன், பார்க் டவுன் பிராந்தியத்திலிருந்து படையெடுத்து வந்திருந்த பல தரப்பட்ட சட்டைக்கார யுவதிகள் அலைமோதும் ஜனத்திரளுக்கு இடையே தனித் தனியே நின்று மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தனர். அவர்களும் சாமிக்கண்ணுவின் ரிக்ஷாவைக் கூப்பிடவில்லை. கசகசக்கும் காக்கி உடை யணிந்து, அந்தி வேட்டைக்குக் கிளம்பிய 'மிலிட்டெரி'க் காரர்களும் அந்த ரிக்ஷா வாலாவைக் கூப்பிடவில்லை. அவனும் ரஸ்தா ஓரமாக நின்று நின்று ஒவ்வொருவரையும் கூப்பிட்டுக் கூப்பிட்டு அலுத்துப் போனான்.

ஆகவே, அவன் அங்கேயே அல்லாடிக் கொண்டிருப்பதில் பலனில்லை யென்று அதை விட்டுப் புறப்பட்டான்.

★

மனிதனும் யமனும் போராடும் யுத்த களமாகிய ஆஸ்பத்திரியின் உயர்ந்த மாடியிலிருந்து, வெள்ளைக் கலை யுடுத்த கறுப்பு நர்ஸ் ஒருத்தி, கீழே ரஸ்தாவில் நின்று கொண்டிருந்த நாகரிக வாலிபனை நோக்கிக் கைக்குட்டையை ஆட்டி ஏதோ சமிக்ஞை செய்து கொண்டிருந்தாள். "ஏலே, பார்த்தியா!" என்று தனக்குள் சொல்லிக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சாமிக்கண்ணு நடந்தான். இதையெல்லாம் பார்க்கப் பார்க்க அவனுடைய பிரம்மச்சரியம் அடுத்த ஆச்ரமத்திற்குத் தாவ வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.

பாய்க் கடையின் அருகே அவன் வந்ததும் மின்சார விளக்குகள் 'குப்'பென்று மலர்ந்தன. 'மெர்க்குரி' விளக்குகள் குளிர்ந்த வர்ண ஒளி வீசின. அவன்

ரிக்ஷாவை ஓரமாக நிறுத்தி அதன் இரு பக்கங்களிலும் இருந்த விளக்குகளை ஏற்றினான். அந்த ஒளிப் பிரவாகத்தின் நடுவே அவன் தன் புதுப் பனியனை நாலாவது முறையாகப் பார்த்துக் கொண்டான்!

ஈட்டன் பஜாரின் ஒழுக்குப் பக்க ஸல்தா மேடையில் ஆங்காங்கே புகை எழும்பிக் கொண்டிருந்தது. 'காம்பவுண்டு'ச் சுவரை ஒட்டிக் கல்லடுப்பு மூட்டி, சொருக்குப் போட்ட தலையுடன் ஏழை ஸ்திரீகள் எத்தனையோ பேர் தங்கள் ஒரு வேளை உணவைச் சமைத்துக் கொண்டிருந்தனர். புருஷர்கள் தங்களுடைய கூலிக் காசை எண்ணிக் கொண்டும், 'கோஞ்சான் குழந்தை'களுடன் கொஞ்சிக் கொண்டும் இருந்தனர். ஒளிவு மறைவின்றி இருபத்தி நான்கு மணி நேரமும் ஊருக்கும் உலகுக்கும் ஒப்பித்துப் பகிரங்க வாழ்க்கை நடத்தும் அவர்களிடையே அப்போது மகிழ்ச்சி நிலவியது.

ஓர் ஓரத்தில் தனியாகச் சமைத்துக் கொண்டிருந்தாள் ஓர் அழகிய யுவதி. கன்னமும் கதுப்புமாய் அவள் ஒருத்திதான் அந்தக் கூட்டத்திலேயே செழிப்பான வனப்போடு இருந்தாள். அவளைச் சாமிக்கண்ணு பார்த்தான்—வைத்த கண் வாங்காமல், ஓர் அடி எடுத்து வைக்காமல்!

மூன்று கற்களின் மேல் ஒரு கரிய பானை வீற்றிருந்தது. அவள் அடுப்பருகே உட்கார்ந்து தீக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

இயந்திரம் போல் ரிக்ஷா இழுக்கும் அவன், அவளைக் கண்டதும் கல்லாய்ச் சமைந்து விட்டான். அவளும் ஏழையாதலால் தானும் ஏழை யென்ற உரிமையுடன் கண்கொட்டாமல் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்!

அருகிலிருந்த சுள்ளியை எடுப்பதற்காகத் திரும்பிய, அவள் சாமிக்கண்ணு தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டாள். அதிர்ச்சியால் அவள் குலுங்கிப் போனாள்.

அவளுடைய முதல் பார்வையில் ஆர்வம் மின்னியது. "ஏலே! சாமிக்கண்ணு...!" என்றது அவள் மனம்.

அடுத்த வினாடியே அவளது கண்களில் காரணமற்ற சினம் எழும்பியது. அதைக் கண்ட அவன் காடி தளர்த்து ஸக்கரத்தை இளக்கினான். அவனுடைய இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

சிறிது தூரம் சென்றதும் அவனுடைய தலை தன்னையும் அறியாமல் பின்னால் திரும்பியது. அவள் தன்னைக் கயிறு கட்டி இழுப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

அவன் சைனாபஜாரைத் தொட்டு விட்டு ரிக்ஷாவை வந்த வழியே திருப்பினான்.

மறுநாள் சாமிக்கண்ணு அருகில் வரும் போதே அவள் சட்டென்று அவனை யார் என்று தெரிந்து கொண்டாள். அவன் தன் பார்வையிலேயே அவளது அழகின் இன்பத்தைப் பருகினான். அவளுடைய தேகத்தின் ஒவ்வொரு அணுவிலும் புனிதமான ஸ்பரிசத்திற்கு அப்பாற்பட்ட ஒரு தேஜஸை அவன் கண்டான்.

அவளும் பார்த்தாள். அவளுடைய பார்வையில் நாணம் கவிந்திருந்தது. வெட்கத்தைக் கோபத்தால் அமுக்கி அவள் முகத்தை வெட்டித் திருப்பினாள். அவனைப் பற்றி அவள் என்னதான் நினைத்தாளோ!

அவனுடைய மனத்தில் நம்பிக்கையும் விரக்தியும் மாறி மாறித் தலையெடுத்தன. அவன் தன் நம்பிக்கைக்கு ஆசையை மூட்டுக் கொடுத்து அசைய ஆரம்பித்தான்.

இந்தச் சமயத்தில், "டேய், ரிக்ஷா!" என்று யாரோ அவனைக் கூப்பிட்டார்கள்.



அவன் ஏறிட்டுப் பார்த்தான். பட்டு அங்கவஸ்திரமும் 'பம் பூட்'ஸூம் அணிந்த கனவான் ஒருவர் எதிரே நின்று கொண்டிருந்தார்.

"டேய், லிங்கிச் செட்டித் தெருவுக்கு வரயா?"

"அங்கே யெல்லாம் சும்ம ரிக்ஷா வராதுங்க!" என்று சொல்லிவிட்டு, அவன் அவரைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் போயே போய்விட்டான்.

தினசரி விடிந்து எழுந்தால்தான் ரிக்ஷா இழுக்கிறேனே! இப்பொழுது அவளைப் பற்றிச் சிந்திக்கும்போது கூடவா அந்தப் பாழும் ரிக்ஷா!


"இந்த ஸோல்ஜர் பயல்கள் வரவே, ரிக்ஷாக்காரப் பயல்களுக்குத் தலைகால் தெரியலே!" என்று கோபத்தில் அவர் என்னென்னவோ சொல்லிக்கொண்டு போனார்.

பாவம், சாமிக்கண்ணுவின் அப்போதைய மனோ நிலை அவருக்கு எப்படித் தெரியும்?

*

அன்று பஸ், டிராம்களில் கூட்டம் குறைந்திருந்தது. ஆபீஸிலிருந்து காலம் கடந்து வீட்டுக்குத் திரும்பும் குமாஸ்தாக்கள் எண்ணெய் வழியும் முகத்தோடு போய்க் கொண்டிருந்தனர்.

சாமிக்கண்ணு பிறகு நிறைந்த சைனா பஜாரில் ஏதோ சில சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவதற்குள் மிகுந்த நேரமாகி விட்டது.



மணி ஒன்பதாகிவிடவே பெரிய பெரிய கடைகளெல்லாம் மூடிக் கிடந்தன.

அவன் தயக்கத்துடன் அவளைப் பார்த்தான்.

எத்தனை முறைதான் சும்மா போய்ப் போய்த் திரும்புவது! பல்லைக் கடித்துக் கொண்டு கையை இறுக மூடிக் கொண்டான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஆதங்கம் நிறைந்த கண்களுடன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவளுடைய கண்கள் காணிப் படபடத்தன. கோபமும் அவளைக் கைவிட்டு விட்டது.

"என் அம்மா!... வந்து...வந்து...உன்னுடன் யாருமே இல்லையா?" என்று கடைசியில் அவன் அவளிடம் பேசியே விட்டான்!

அவள் 'அப்பாடி!' என்று பெருமூச்சு விட்டாள்.

"ஊம் ஹூம்...இல்லே! நீ ஏன் அதைக் கேட்கிறயாம்?" என்று கோப மற்ற கோபத்துடன் கேட்டாள் அவள்!

"இல்லே; சும்மா கேட்டேன்!" என்று சொல்லிப் பல்லை இளித்துக் கொண்டே, அவன் அதுவரை கர்ம சிரத்தையாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த ரிக்ஷாவைக் கீழே வைத்தான்.

"கேட்டையும் மூலமும்! வேறே சோலி லே இல்லையா, உனக்கு?"

"அதை யேன் கேட்கிறே? ராவு பகலுன்னு கிடையாது—எப்பவும் 'டூட்டி' தான். ஏ, அப்பா! ஓடி ஓடிக் காலெல்லாம் என்னமா வலிக்குது!" என்று சொல்லி, அவன் கீழே உட்கார்ந்து காலைப் பிடித்து விட்டுக் கொண்டான்.


"அப்படியா? அப்போ நீ தினம் எம்மாஞ் சம்பாதிப்பியோ?"

"காசுக்கென்ன குறைச்சல்? எவ்வளவு சம்பாதிச்சாலும் விலைய விலையத் தின்கிறதுலேதான் சரியாப் போகுது! அப்படியாவது வாய்க்கு வயணமாச் சோறு கிடைக்குதா? ஹூம், அதை யேன் கேட்கிறே? அவலப் பிழைப்பு!"

"நீ குடிப்பியோ?"

"சேச்சே, கிடையவே கிடையாது! அது, 'என்னடா இது, இப்படி ஒண்டியாயிருந்துட்டு, எத்தனை நாள்தான் கஷ்டப்

சோம்பல் யோசனை!



எஜமான்:—அடேய், எனக்கு ரொம்ப சோம்பலாயிருக்கு. எனக்காக நீ கொஞ்சம் பேப்பரைப் படித்து விட்டு. நான் செய்ய வேண்டிய தேகப் பயிற்சியையும் செய்து விடு! போடா சோம்பேறி! என்னடா முழிக்கிறே?

படறது!' என்று சில சமயம் கவலை வந்திடும்......"

"ஐயோ, பாவம் ......!"

"அப்போ மாத்திரம் கொஞ்சம் குடிச்சிக்குவேன்; ஆனா வழக்கமாக் குடிக்கிற தில்லே! கல்யாணமாச்சின்னா கள்ளுக் கடைப் பக்கமே தலைவைத்துப் படுக்கிறது இல்லேன்னு சத்தியம் கூடப் பண்ணி இருக்கேன் .... சீ, சீ! கெட்ட வழக்கமாச்சே, அது!......ஆமாம், நீ எங்கே வேலை பார்க்கிறே?"

"நானும் எங்க ஆத்தாளும் போன வருஷம் பட்டணத்துக்கு வந்தோம், பிழைப்பதற்கு! வரவர எங்க ஆத்தாளுக்குக் காசாசை ரொம்ப ஜாஸ்தியாய்ப் போச்சு! என்னைத் தப்பான வழியிலே இறங்கச் சொன்னா! நான் அவளோடு சண்டை பிடிச்சிக்கிட்டு வேறே வந்திட்டேன். இப்போ, ரெண்டு கம்பெனியிலே பெருக்கிப் பிழைக்கிறேன்!"

"சே! அந்த வேலை யாரு செய்வா? அப்போ, உனக்குத் துணைக்கு வேறே ஆளில்லையாக்கும்? நான் நெனைச்சது சரிதான் போலிருக்கு! அடாடா!"

"என்னவோ, இந்த ஜனங்கள்தான் உடன் பிறப்பு மாதிரி இருந்து வாராங்க! ஆனாலும் மனசுக்குச் சந்தோஷமே இல்லே!"

"ஐயோ, பாவம்! நீயும் என்னைப் போலத்தான்!......நான் எங்கே சுத்தியும் தினம் மூணு ரூபாய் சம்பாதிக்கப் போடுவேன். ......வந்து, ஹூம்......"

"என்னத்துக்கு அப்படி இழுக்கிறே? சொல்லேன் அம்மா!' என்றான் அவன்.

"யாராவது வேலைக்குச் சோறு, தண்ணி கொடுத்தால்..." என்று ஆரம்பித்தான் அவன்.

"சோத்துக்கு என்ன பஞ்சம், ஒனக்கு ஒருத்தனுக்கு! சோத்தோட சோறு, கறியோட கறி!"

"பார்த்தியா! அப்போ நீயே போடறேன் என்கிறயா? ஆஹா, எவ்வளவு தங்கமான மனசு!"

"ஆமாம், நீ ஒழுங்காய்ப் பணக் காசு..."

"அதென்ன, அப்படிச் சொல்றே? பீடிக்காசு கூட எடுக்காமல் 'என்ன வேணுமோ செய்' என்று சொல்லிச் சம்பாத்தியத்தை அப்படியே உன் கையிலே கொடுத்திட மாட்டேனா!"

"ஆமாம், நம்மைப் பார்த்து ஊர்க்காரங்க என்ன சொல்வாங்க?"

"என்ன சொல்வாங்க! இந்தா பாரு நீயோ கல்யாணம் ஆகாத கன்னிப் பொண்ணு! நானும் அப்படித்தான்! உன் கழுத்திலே தாலியில்லே என்பதை அப்போதே நான் பார்த்துக்கிட்டேன். நான் ஒனக்குத் தாலி கட்டிப் போடுறேன்! என்ன, இஷ்டம்தானே?"

அவள் தலை குனிந்து கொண்டே, "இஷ்டமில்லாமல் என்ன!" என்றாள் அரைக் கண் பார்வையுடன்.

மணி ஓசையுடன் கடைசி டிராம் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் அவளுடைய மிருதுவான கையைப் பிடித்தான். ஏற்கனவே வாங்கி மடியில் வைத்திருந்த மஞ்சள் பட்டுச் சரடை எடுத்துச் 'சாமி'யை நினைத்துக் கொண்டு அவளுடைய கழுத்தில் கட்டினான்.

அவர்களுக்கு எதிரே, சுவரில் ஒட்டியிருந்த சினிமா விளம்பரத்தில் கதாநாயகன், கதாநாயகியின் கூந்தலில் மலரை வைத்துக் கொண்டிருந்தான். அதேமாதிரி சாமிக்கண்ணுவும் அவள் கூந்தலில் மலரை வைத்தான்!

"ஆமாம், ஒன் பெயரென்ன?"

"ர...த்...தி...ன...ம்!"

அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ரத்தினம்! அடாடா! என்ன 'பஸ்டா'ன பேரு! ரத்தினம்!......என் பேரு என்ன, தெரியுமா? சாமிக்கண்ணு!"

அவ்வளவுதான்; இருவரும் ஒருயிராயினர்! அவன் லேசாகச் சிரித்துக்கொண்டே அவன் மடியில் சாய்ந்துவிட்டாள்!

இந்தச் சமயத்தில் "ஏண்டி, ரத்தினம்!" என்று யாரோ தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு, அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அடுத்த குடும்பத்துக் கிழவி வந்து கொண்டிருந்தாள்.

"ஏண்டி, இந்தப் பிள்ளையாண்டான் யாரு?... ஒங்க ..."

"ஆமாம், புருஷர்! இன்னிக்குத்தான் கல்யாணம் ஆச்சு!"

"அப்படியா!"

கிழவியின் பொக்கை வாய் முழு அகலத்திற்கும் திறந்துவிட்டது. "போகட்டும், போ! நல்ல பையன்மாதிரி இருக்கான்!" என்றாள்.

சாமிக்கண்ணு நிமிர்ந்து உட்கார்ந்தான். "ரத்தினம், பெரியம்மாவைக் கும்பிடு!" என்றான்.

"நீங்களும் கும்பிடுங்க!" என்று சொல்லிக் கொண்டே, அவள் கும்பிட்டாள். சாமிக்கண்ணுவும் சாஷ்டாங்கமாக விழுந்தான். கிழவி வாய் குளிரத் தம்பதிகளை ஆசிர்வதித்தாள்.

அவர்கள் கொடுத்த தாம்பூலத்தைப் போட்டுக்கொண்டு சிறிது நேரம் அளவளாவி விட்டுக் கிழவி போய் விட்டாள்.

"ரத்தினம்! இந்தப் பணத்தை உள்ளே வை!" என்று சாமிக்கண்ணு மடியிலிருந்த சில்லறையை எடுத்துத் தன் புது மனைவியிடம் கொடுத்தான். அவள் மகிழ்ச்சியோடு வாங்கி முந்தானையில் முடிந்துகொண்டாள்.

இருவரும் உணவருந்தி விட்டுத் தாம்பூலம் தரித்துக் கொண்டனர்.

"ரத்தினம்! எனக்கு இன்னைக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு, தெரியுமா?"

"அது சரி! பகலெல்லாம் அலைஞ்சிருக்கீங்க, படுக்க! நான் கால் பிடிக்கிறேன்!" என்றாள் அவள்.

ரிக்‌ஷா மெத்தையைத் தலைக்கு வைத்துக்கொண்டு அவன் சுதந்திர வானத்தின் கீழே படுத்துக் கொண்டான்.

"நாளைக்கு ஒங்க துணிகளுக்குச் சோப்புப் போட்டுத் தோய்க்கிறேன்... சோத்துக்கு வந்து சோறு தின்னுங்க.........குடிக்கவே படாது, தெரியுமா? பருமனான மனிசன் கனே வைச்சு இழுத்துக்கிட்டு வேகமா ஓடாதீங்க! உடம்புக்கு எதாச்சும் வந்திடும்...!" என்று அவள் என்னவெல்லாமோ அவனிடம் சொல்லிக் கொண்டு போனாள்.

"நாளைக்கு ஒனக்கு ஒரு நல்ல சேலையும் ரவிக்கையும் வாங்கணும்......நீ கம்பெனி வேலையை நாளையிலிருந்து விட்டிடு!...... இனிமேல் நம்ம ரெண்டு பேரும் ஒண்ணு... நீ கவலையில்லாமல் இருக்கணும்......" என்று அவனும் பதிலுக்கு அவளிடம் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டு போனான்!

அன்றிரவு வெகு நேரம் வரை அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். ஆனால், சாமிக்கண்ணு அவளை அதிக நேரம் கால் பிடிக்க விடவில்லை!

காலக்ஷேபம்

எல்லாம் தெரியும்!

ஒரு பாடகர் பாட்டுப் பாடி வெகுமதி பெறும் பொருட்டு ஒரு பிரபுவின் வீட்டுக்குச் சென்றார்.

பிரபு:—பாடகரே, உமக்குப் 'பல்லவி' பாடத் தெரியுமோ?

பாடகர்:—பிரபுவே, என்னை என்ன அவ்வளவு கேவலமாக நினைத்து விட்டீர்கள்? நான் பல்லவி, அநுபல்லவி, சரணம் எல்லாம் பாடுவேனே!

★

தப்பு இல்லை!

குற்றவாளியைப் பார்த்ததும் மாஜிஸ்திரேட்டுக்குக் கோபம் உண்டாயிற்று.

"ஏண்டா, உனக்குக் கொஞ்சங்கூட வெட்கம் இல்லையா, இந்தக் கோர்ட்டிலே மறுபடியும் வந்து நிற்பதற்கு?" என்று கேட்டார்.

குற்றவாளி ரொம்பப் பணிவாக, "எஜமான், தாங்களே இந்தக் கோர்ட்டுக்கு மறுபடியும் மறுபடியும் வந்து கொண்டிருக்கும்போது நான் வருவதில் என்ன தப்பு?" என்றான்.

முன் ஜாக்கிரதை!

ஒரு கூட்டத்தில் கல் வந்து விழுந்தது. உடனே ஒருவர் பரபரப்புடன் மேல் வேஷ்டியைத் தலையில் பலமாகக் கட்டினார்.

இன்னொருவர்:—ஸார்! வேண்டாம், வேண்டாம்! யாராவது விஷமக்காரப் பயலா யிருப்பான்! அவனை ஒன்றும் செய்ய வேண்டாம்!


அவர்:—அட, அவனை நான் ஒன்றும் செய்யப் போவதில்லை, ஐயா! தலையில் கல் விழுந்தால் அடிபடுமே என்றுதான் துணியைக் கட்டிக்கொள்கிறேன்!

★

தெரிகிறது!

கண் வைத்தியர்:—என்ன ஐயா, இது? இவ்வளவு பக்கத்தில் போர்டை வைத்துக்கூடவா கண் தெரியவில்லை?

நோயாளி:—கண் தெரிகிறது ஐயா, கண் தெரிகிறது; படிக்கத்தான் தெரியவில்லை!



அணையாத் தீபம்

அம்புலு

“அம்மா! அப்பா வந்து விட்டாரா?” என்று கேட்டுக்கொண்டே குழந்தை ஆராவமுதன் தூங்கி எழுந்ததற்கும், அப்பா ஆபீஸிலிருந்து வந்ததற்கும் சரியாக இருந்தது. உடனே ஓடிப் போய் அப்பாவின் கால்களைக் கட்டிக் கொண்டான் குழந்தை. அவரும் அவனுடன் விளையாட ஆரம்பித்து விட்டார். அடுத்த நிமிஷமே ஆராவமுதனின் மழலைப் பேச்சில் தம் மனதைப் பறிகொடுத்து விட்ட அவருக்குக் கோட்டைக் கழற்றி வைக்கக்கூட மறந்து போய் விட்டது. அதை நினைவு மூட்ட நானும் மறந்து விட்டேன்.

“இந்த நாள் வருமா?” என்று நான் முன்னால் எத்தனை நாட்கள் ஏங்கியிருக்கிறேன்?

* * *

பாலூர் ஆஸ்பத்திரியில் நான் சிறைப் பட்டுக் கிடந்தேன். சிறைச்சாலையிலாவது கைதிகளுக்கு நடமாடும் உரிமையும் வேலையும் உண்டு. இங்கே எனக்கு ஒன்றுமில்லை; நடப்பதற்குக்கூட டாக்டரின் அனுமதி வேண்டும்! ஆமாம், படுக்கையை விட்டு நான் எழுந்திருக்கவே கூடாது.

கர்ப்பம் தரித்த நாள் முதல் எனக்கு இந்தத் தண்டனை. அது சாமானிய கர்ப்பமல்லவென்று முதலில் தெரியாமல் போய் விட்டது. பிறகு தெரிந்து என் உயிருக்கே மோசம் வரக்கூடிய நிலையில் நான் அங்கு வந்து சேர்ந்தேன். குழந்தையோ இறந்து போய்விட்டது; என்னையாவது காப்பாற்றி என் பெற்றோரிடம் ஒப்புவிக்க அந்த ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டரான ஒரு வெள்ளைக்கார கன்யா ஸ்திரீ மிகவும் பாடுபட்டான். அவன் சொன்னபடி கேட்க வேண்டியதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

முதலில் ஒரு வாரத்தில் உடம்பு சரியாகிவிடும் என்று சொன்னான் அந்த டாக்டர். பிறகு மாதக் கணக்கில் எனக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தான். என்னை எப்பொழுது வீட்டிற்கு அனுப்புவது என்பதை அவன் நிச்சயம் பண்ண என் உடம்பு இரண்டு நாளாவது நன்றாக இருந்தால்தானே? ஜுரமும் வயிற்றில் வலியுமாகச் சேர்ந்து ஒன்றுக்கொன்று துணையாக என் உடம்பில் இருந்து கொண்டேயிருந்தன. நான் ஆஸ்பத்திரியை விட்டு உயிரோடு வருவேனா என்று சந்தேகமாகவே இருந்தது.

நான் நோயில் விழுந்து விட்டதால் அவரை யார் பார்த்துக் கொள்வார்கள்? மாமியாரோ வயதானவள். அவசரத்திற்குச் சமைக்க அவளால் முடியாது. ஆறிப்போன காப்பியைப் ‘பிளாஸ்’கில் விட்டுக் கொடுப்பாள். குழாயில் தண்ணீர் நின்று போய் விட்டால் கிணற்றிலிருந்து அவர்தான் தண்ணீர் எடுத்துக் கொட்ட வேண்டும். பாவம், என்ன கஷ்டப் படுகிறாரோ! உடம்பு எப்படி இருக்கிறதோ!—என்றெல்லாம் எண்ணி என் மனம் தவித்தது. எப்பொழுது உடம்பு சரியாகிப் பட்டணம் போவோம் என்ற ஆவல் என் உள்ளத்திலிருந்தது.

அந்த டாக்டர் என்னைப் பார்க்க வரும்பொழுதெல்லாம், “எப்பொழுது வீட்டுக்குப் போகலாம்?” என்று கேட்டு நாளைத் தள்ளிக் கொண்டு வந்தேன்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் ஏகப்பட்ட மருந்துச் சீட்டுகளுடன் என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தான் டாக்டர்.

வீட்டுக்கு வந்த சில தினங்களுக்கெல்லாம் அப்பாவைக் கூப்பிட்டு, நான் பட்டணம் போவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி சொன்னேன். அவர் சிரித்துக் கொண்டே, “என் அம்மா, இவ்வளவு அவசரம்? இன்னும் கொஞ்சம் உன் உடம்பு நன்றாக ஆகட்டுமே!” என்றார். அம்மாவோ இவ்வளவு பலஹீனத்தில் நான் புக்ககத்திற்குப் போகக் கூடாதென்று சண்டை பிடித்தாள். எங்களுக்குள் தர்க்கம் நடந்து கொண்டிருக்கும்போதே மறுபடியும் எனக்கு ஜுரம் வந்து விட்டது.

ஆனால், இந்தத் தடவை நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் படுத்துக் கொள்ளாமல் வீட்டிலேயே இருந்து மருந்து சாப்பிட்டேன். ஆனாலும் என் உடம்பு குணமான பாடில்லை! என்ன செய்வதென்று தெரியாமல் என் பெற்றோர் கவலையில் மூழ்கியிருந்த சமயத்தில், என் கணவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் எனக்குச் சென்னையிலேயே வைத்தியம் பார்ப்பது நல்லதென்றும், என்னைக் கொண்டு வந்து விட்டு விடும்படியும் அவர் எழுதியிருந்தார்.

என் பெற்றோருக்கும் அதுவே சரியானது என்று தோன்றியதால், என்னை அழைத்துக்கொண்டு பட்டணத்துக்கு வந்தார்கள்.

ஸ்டேஷனில் அவரைப் பார்த்ததும் என் மனதிலிருந்த கவலையெல்லாம் போய் உடம்பும் தெளிந்ததுபோல் எனக்கு ஒரு விதமான உணர்ச்சி தோன்றியது. 'டாக்ஸி'யில் மயிலாப்பூரிலிருக்கும் எங்கள் வீட்டுக்குப் போகும்போது வழி நெடுக நானும் அவரும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே போனோம்.

வண்டி வீட்டு வாசலில் நின்றதும், ஓர் அழகிய பதினெட்டு வயதுப் பெண் ஓடோடியும் வந்து வண்டியின் கதவைத் திறந்தாள். "இவள் யார்?" என்று நான் அவரைத் திடுக்கிட்டுக் கேட்டேன்.

"ஜெயாவை உனக்குத் தெரியாதா? என் மாமாவின் பெண். நம் கல்யாணத்தின் போதுகூட வந்திருந்தாளே!" என்றார் அவர்.

"அப்பொழுது சின்னப் பெண்ணாக இருந்திருப்பாள்!" என்று கூறிவிட்டு, "எவ்வளவு நாளாக இவள் இங்கே இருக்கிறாள்?" என்று கேட்டேன்.

"அவள் வந்து ஆறுமாதமாயிற்று. அம்மா கேட்டுக் கொண்டதன்பேரில் வரவழைத்தேன்!" என்றார் அவர்.

பிறகு, நாங்கள் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்றோம்.

2

என் அறையில் ஒரு கட்டிலும் மேஜையும் இருந்தன. அந்த மேஜையின்மேல் என்னுடைய மருந்து சீசாக்கள் அலங்காரமாக வைக்கப்பட்டன.

அன்று பத்து மணி அடிக்கும் வரையில் எங்களோடு பேசிக்கொண்டே இருந்து விட்டு, அவர் ஆபீஸுக்குக் கிளம்ப அவசரப்பட்டார். "ஜெயா! ஸ்நானம் செய்வதற்கு வேண்டியவற்றையெல்லாம் எடுத்து வைத்து விட்டாயா?" என்று உரக்கக் கேட்டார்.

"இதோ, நான் போய் எல்லாவற்றையும் எடுத்து வைக்கிறேனே!" என்று நான் எழுந்திருக்கப் போனேன். "வேண்டாம்; நீ பேசாமல் படுத்துக்கொண்டிரு. எல்லாம் ஜெயா செய்வாள்!" என்று கூறிவிட்டு அவர் ஸ்நானம் செய்யப் போய்விட்டார்.

ஜெயா, சுறுசுறுப்புடன் சோப்புப் பெட்டி, துண்டு எல்லாம் எடுத்துக் கொண்டு போய் அவரிடம் கொடுத்தது, பிறகு இலை போட்டுச் சாதம் போட்டது, டிபன் கட்டிக் கொடுத்தது, வெற்றிலை எடுத்து வைத்தது — எல்லாவற்றையும் நான் கவனித்தேன். எனக்குச் சந்தோஷமாக இருந்தது. "நல்ல சமயத்தில் இந்தப் பெண் வந்திருக்கிறது; இல்லாவிட்டால் இவர் ரொம்பக் கஷ்டப்படுவார்!" என்று எண்ணினேன்.


அவர் ஆபீஸுக்குப் போனதும் ஜெயா எனக்குப் பணிவிடை புரிய வந்தாள். "மன்னி! சீக்கிரம் குளித்துவிட்டுச் சாதம் ஆறிப்போவதற்குள் கொஞ்சம் சாப்பிடேன்!" என்று உபசாரம் பண்ணினாள். நானும் அப்படியே செய்தேன்.

சாயந்திரம் அவர் ஆபீஸிலிருந்து வந்தார். ஜெயா, ஓடிப்போய் அவர் கையிலிருந்த பையையும் 'தர்மாஸ் பிளாஸ்'கையும் வாங்கிக் கொண்டாள். பிறகு காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அவர் காப்பி சாப்பிட்ட பிறகு நேராக என் அறைக்கு வந்தார். என் அறையில் அப்பா, மாமியார், ஜெயா எல்லோரும் இருந்தார்கள். பட்டணத்திலிருந்த பெரிய பெரிய டாக்டர்களைப் பற்றியெல்லாம் நாங்கள் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் ஒரு பிரபல லேடி டாக்டரிடம் மறு நாள் போவது என்று நிச்சயம் செய்தோம்.



ரயிலில் வந்த சிரமம் தாங்காமல் அன்று இரவே எனக்குச் சுரம் வந்துவிட்டது. நான் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் ஜெயா இரவு முழுவதும் கண்விழித்திருந்து அடிக்கடி எனக்கு வெந்நீரும் ஹார்லிக்ஸும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மாதமாயிற்று. புதிய டாக்டர் கொடுத்து வந்த



ஆதிக்கையில் ஆவாரம் ஏற்பட்டதின் விபரீத பலன் !

செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னாள்!" என்று சொல்லிவிட்டு, "ஹூம்... நீ வியாதிக்காரியாகாவிட்டால் அவர்கள் ஏன் இப்படிச் செய்யப் போகிறார்கள்? உன் அதிர்ஷ்டம் அப்படி இருக்கிறது!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்

இந்தச் செய்தியைக் கேட்டதும் என் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. ஒன்றும் பேசத் தோன்றாமல் மௌனமாக இருந்தேன். "கடவுள் விட்ட வழி விடட்டும்; நீ எதற்கும் கவலைப் படாதே, அம்மா!" என்று கடைசியாகச் சொல்லிவிட்டு, அப்பா என் அறையை விட்டு வெளியே போய்விட்டார்.

மருந்துகளைத் தவறாமல் சாப்பிட்டு வந்தேன். எனக்கு வேண்டியவர்கள் பக்கத்தில் இருந்ததால், மனதுக்கும் உற்சாகமாக இருந்தது. சீக்கிரத்தில் பூரண சுகம் அடைந்து விடுவோம் என்று சந்தோஷப் பட்டேன். ஆனால் அந்தச் சந்தோஷம் நிலைக்கவில்லை.

ஒரு நாள் யாருமில்லாத சமயத்தில் என் தகப்பனார் என்னிடம் பரபரப்புடன் வந்து, "அம்மா! ஊருக்குப் போகலாமா?" என்று கேட்டார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "ஏன் அப்பா?" என்று கேட்டேன்.

அவர் கண்களில் ஜலம் வந்துவிட்டது. "உனக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது!" என்றார்.

"என்ன விஷயம்?" என்றேன்.

"பத்து நாளைக்கு முன் உன் மாமியார் என்னிடம், 'உங்கள் பெண் நோயாளியாகப் போய்விட்டாளே, என் பிள்ளை எத்தனை நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது? இன்னொரு கல்யாணம் பண்ணுவதற்கும் யோசனையாக இருக்கிறது! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள?' என்று கேட்டாள். அதற்கு நான் என்ன சொல்வது? 'உங்களுக்கு அதுமாதிரி எண்ணம் இருக்குமானால் தாராளமாகச் செய்து கொள்ளுங்கள்!' என்று சொல்லி விட்டேன். அதன்பேரில் தன் தம்பியின் பெண்ணான ஜெயாவை இந்த வருஷம் கல்யாணம் பண்ணியாக வேண்டுமென்றும், ரொம்ப ஏழையாக இருப்பதால், அவளை இரண்டாந் தாரமாகக் கொடுக்க அவள் தாயார் சம்மதித்து விட்டாளென்றும், தை மாதம் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடும்

3

நாளாக ஆக, எனக்கு ஒவ்வொன்றும் தலைகீழாகத் தெரிய ஆரம்பித்தது. என் கணவர் ஜெயாவிடம் உரிமை கொண்டாடுவது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அவள் அவருக்குச் சாதம் போடுவது, காப்பி கொடுப்பது எல்லாவற்றையும் நான் பெரிய குற்றமாகக் கருதினேன்.

இரவு பத்து மணிக்குப் பாலை எடுத்துக் கொண்டு ஜெயா அவர் அறைக்குள் போவாள். அவருடைய ஆபீஸ் வேலை அப்பொழுதும் முடிந்திராது. பாலை மேஜை மேல் வைத்துவிட்டு, "சூடு ஆறிப் போவதற்கு முன் பாலைக் குடித்து விடுகிறீர்களா? மறந்து விடாதீர்கள்!" என்று எச்சரித்து விட்டுத் திரும்புவாள். எனக்கு நெஞ்சு வெடித்து விடும்போலிருக்கும். இரவில் பாலை எடுத்துக்கொண்டு அவர் அறையில் நுழைவதற்கு என்னைத் தவிர வேறு யாருக்கு உரிமையுண்டு? அந்த உரிமையை இந்த ஜன்மத்தில் நாம் ஜெயாவுக்கு அளிக்கக் கூடாது என்று மனதில் நிர்மாணித்துக் கொள்வேன்.

இவ்விதம் நான் ஜெயாவிடம் கொண்ட அசூயை நாளுக்குநாள் வளர்ந்து, கடைசியில் நான் அவளைக் காரணமில்லாமல் கண்டிக்கவும் திட்டவும் செய்தேன்.

தினமொன்று என் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. அர்த்தமற்ற பயமும் துக்கமும் என் மனதில் நிறைந்தன. "எப்படியும் ஜெயா என் ஸ்தானத்திற்கு

வந்துவிடுவான்!" என்ற எண்ணம் என் உயிரைத் தின்ன ஆரம்பித்தது. ஆனால் இந்தப் போராட்டத்திற்கு நடுவே இன்னொரு போராட்டம் எழுந்து, என் எண்ணத்தை மாற்றிவிடும் என்று நான் கனவிலும் கருதவில்லை.

அன்று என் நாத்தனார் என்னைப் பார்ப்பதற்காக ஊரிலிருந்து வந்திருந்தாள். அவளுக்கு மூன்று வயதுக் குழந்தை ஒன்று இருந்தது. அது அழகாகவும் சமத்தாகவும் இருந்தது. என் கணவர் கூப்பிட்டதும் கொஞ்சமாவது சண்டித்தனமோ அழுகையோ இல்லாமல் குழந்தை பக்கத்தில் வந்து நின்றதால், அவர் ஆசையாக அதைத் தூக்கிக்கொண்டு என் அறைக்கு வந்தார்.

அவர் முகத்தைப் பார்த்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. கண்ணில் ஜலம் ததும்ப வாடிய முகத்துடன் அவர் குழந்தையுடன் விளையாடினபோது, அவர் உள்ளத்தில் குழந்தை ஏக்கம் குடிகொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. உடனே என் மனப் புயல் வேறு திசையை நோக்கி அடிக்க ஆரம்பித்தது.

"ஆமாம், அவர் மறுமணம் செய்து கொள்ள விடக்கூடாது என்று நினைக்கிறேனே, இந்த ஜன்மத்தில் நம்மால் அவருக்கு இந்தப் பேறு கிடைக்குமா?" என்று சிந்திக்கத் தொடங்கினேன்.

நான் உயிரோடு இருக்கும்போதே என் கணவருக்கு ஜெயாவைக் கல்யாணம் செய்து வைத்து விடுவது என்று நிர்மானித்தேன்.

இந்த எண்ணத்தை என் மாமியாரிடம் தெரிவித்ததும் அவள் சந்தோஷப் பட்டாள். "என்னமோ, அம்மா! இந்த வீட்டு விளக்கு அணைந்து போகாமல் பார்த்துக் கொள்வது உன் கடமை!" என்றாள்.

4

அன்றிரவு என் கணவர் தம் ஆபீஸ் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போகுமுன், "கோமதி! நீ ஏன் இன்னும் தூங்கவில்லை?" என்று கேட்டுக்கொண்டே என் அறைக்கு வந்தார்.


"உங்களிடம் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் விழித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றேன் நான்.

"என்ன சமாசாரம்?"

"ரொம்ப நாளாகச் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். ஆனால் இன்று வரை சொல்லவில்லை!" என்ற பீடிகையுடன் ஆரம்பித்து, "எனக்கோ உடம்பு சரியாக இல்லை; சரியாய்ப் போகும் என்ற நம்பிக்கையும் இல்லை. தாங்கள் எவ்வளவு நாளைக்கு இப்படிக் கஷ்டப்படுவீர்கள்......?" என்று சொல்லிச் சற்று நிறுத்தினேன்.

"அதற்கு என்ன செய்வது?"

"பேசாமல் ஜெயாவை இரண்டாந் தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள்! அவளைப்போல் நல்ல பெண்



............டாக்ஸி வீட்டு வாசலில் வந்து நின்றதும், ஓர் அழகிய பதினெட்டு வயதுப் பெண் ஓடோடியும் வந்து வண்டியின் கதவைத் திறந்தாள்............

கிடைப்பது அரிது. எனக்கும் அவரால் நன்மை யுண்டு!"

"இதென்ன அக்கிரமம்! ஜெயாவை எதற்காகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லுகிறாய்? நான் நோயாளியாகவும், நீ தேகாரோக்கியத்துடனும் இருந்தாயென்று வைத்துக்கொள். அப்பொழுது நீ என்ன செய்வாய்? எனக்குத் தேகாரோக்கியத்தை அருளும்படியாகக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பாயல்லவா? அப்படியேதான் நானும் உனக்கு உடம்பு சௌக்கியமாக வேண்டுமே என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்! வேறு எதைப் பற்றியும் நான் நினைப்பதும் இல்லை; நினைக்கவும் முடியாது!" என்றார் அவர்.

"தாங்கள் மனித வர்க்கத்தில் மேலானவர் என்பதை நான் இதுவரை அறிந்து கொள்ளவில்லை. என் குற்றத்தைத் தயவு செய்து மன்னிப்பீர்களா?" என்று உள்ள முருகி வேண்டிக் கொண்டு, நான் அவருடைய பாதகமலங்களில் விழப்போனேன்.

அவர் தடுத்து, ஒரு தாயின் பரிவுடன் என்னைத் தம் கையில் தாங்கிக்கொண்டு, "யார் மேலானவர்? இன்னொரு பெண்ணை நான் மணந்து கொள்வதால் உனக்கு நேரக்கூடிய நஷ்டம் எவ்வளவு பெரிது என்று தெரிந்திருந்தும், எனக்குச் சிபார்சு செய்தாயே, நீதான் மேலானவள்!" என்றார்.

* * *

"இப்படிப்பட்ட மகானுக்கு முன்னால் நான் எவ்வளவு அற்பமாகப் போய்விட்டேன்?" என்பதை நினைக்க நினைக்க இப்போதும் எனக்கு வெட்கமாக இருக்கிறது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நான் ஜெயாவை என் உயிரினும் மேலாக நேசிக்கத் தொடங்கினேன். அடுத்த வருஷமே அவளை என் தமையனுக்குக் கல்யாணம் செய்து வைத்தேன். கடவுள் அருளால் நானும் வெகு சீக்கிரத்திலேயே நோய் வாயிலிருந்து தப்பி, என் அருமைக் குழந்தை ஆராவமுதனுக்குத் தாயாரானேன்.

காசிக்குப் போயும்...

சுபஸ்ரீ

ராவ்சாஹிப் சுப்பிரமணிய சாஸ்திரியின் ஒரே பிள்ளையான ராமலிங்கத்தை இரவு எட்டு மணிக்குத் தேள் கொட்டிவிட்டது என்றால் ஆர்ப்பாட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்?

"என்னடாப்பா, ராமலிங்கம்! எப்படியடா கொட்டித்து?" என்று விசனத்துடன் வினவினாள், அவனது அருமைத் தாயார்.

"கிரிக்கட் 'பேட்'டைத் தேடிக் கொண்டிருந்தேன், அம்மா! தேள் கொட்டிடுத்து, அம்மா!" என்று அலறிக் கொண்டே ராமலிங்கம் கையை உதறினான்.

"அழாதடாப்பா, என் கண்ணே! அந்தப் பூக்கடைப் பொன்னுசாமிக்கு மந்திரிக்கத் தெரியுமாம்; இப்ப வந்துடுவான். சித்த பொறுத்துக் கோடாப்பா!" என்று பிரலாபித்தாள், புடவை நுனியால் கண்ணைத் துடைத்துக் கொண்டே.

பொன்னுசாமி வந்து என்னவோ தடவைகள் மந்திரித்தும், விஷம் என்னவோ கொஞ்சமும் இறங்கவில்லை. பையனின் துடிதுடிப்பும் சிறிதும் நிற்கவில்லை.

"எம்மா! இன்னும் தேளை அடிக்கலீங்களா? அது உசுரோட இருக்கிற வரைக்கும் வலி நிக்காதுங்களே!" என்றான் பொன்னுசாமி.

"எங்கெல்லாமோ தேடித் தேடிப் பார்த்தும் அந்தப் பாழாய்ப் போன தேள் அகப்படலையே, பொன்னுசாமி!" என்று அங்கலாய்த்தாள், ராமலிங்கத்தின் தாயார்.

எப்படியோ அன்றிரவு கழிந்தது. மறுநாள் மத்தியானம் இரண்டு மணிக்கு வலி குறைந்து விட்டது என்று கூறிக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டான், ராமலிங்கம். அவனது தாயார் எவ்வளவோ தடுத்தும் அவன் நிற்கவில்லை.

பள்ளிக்கூடத்தை அடைந்ததும் அவனது நண்பன் ஜயராமன், "டேய், ராமலிங்கம்! என்னடா காலையில் பள்ளிக்கூடம் வரவில்லை?" என்று கேட்டான்.

"காரணமிருக்குடா! நேற்று இராத்திரி தேள் கொட்டி விட்டதுபோலப் பாசாங்கு செய்து, எங்கள் வீட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டேன்!"


"எதுக்குடா, இவ்வளவும்?"

"இது தெரியவில்லையா, உனக்கு? இன்னிக்குக் காலம்பற வைக்கிற இலக்கணப் பரீக்ஷையில் 'பெயிலா'ப் போகிறவர்களையெல்லாம் ஒரு நாள் முழுதும் 'பெஞ்ச்' மேல் ஏற்றி நிற்க வைப்பேனென்று நம்ம வாத்தியார் பயமுறுத்தினாரன்றோ. அதுக்காகப் பரீக்ஷைக்கே 'டிமிக்கி' கொடுத்து விட்டேன்! எப்படி நம்ப 'பிளான்'?"

"அட போடா, அவ்வளவும் வீண் தாண்டா?" என்றான் ஜயராமன்.

"ஏண்டா?" என்று வியப்புடன் வினவினான், ராமலிங்கம்.

"ஜுரம்னுட்டு வாத்தியார் இன்னிக்கு பள்ளிக்கூடம் வரவில்லை; அதனால் நாளைக்குத்தாண்டா பரீக்ஷை!" என்றான் ஜயராமன்!



பொம்மை வண்டி

லல்லு

"அப்பா!......"

"என்னடா?"

"எனக்கு ஒரு வண்டி வேணும்; வாங்கித் தரயா?"

மூன்றே வயது நிறைந்த கிருஷ்ண விக்கிரகம் போன்ற குழந்தை. தன் பவள வாயைத் திறந்து கேட்கும் அழகு ஒன்றே போதும்: எப்பேர்ப்பட்ட 'லைலக்'கும் காசை வீசி எறிந்து வாங்கிக் கொடுத்து விடுவான்.

ஆனால் சூரி......

அன்று, தான் வேலை பார்க்கும் வக்கீல் வீட்டிலிருந்து அவன் ஏதோ 'ஸஹஸ்ர நாம அர்ச்சனை' பெற்றுக்கொண்டு மனம் நொந்துபோய் வீடு வந்திருந்தான். காப்பி போட்டுச் சாப்பிடக்கூட மனமில்லாமல் சாய்வு நாற்காலியிலே உட்கார்ந்து விட்டான்.

பொம்மை வண்டி விற்கும் சாயபு வீட்டைத் தாண்டிப் போய் விட்டதைக் கண்ட ரவி, அப்பாவின் வேஷ்டியைப் பிடித்து இழுத்தான். அதன் பலன் அவன் கன்னத்திலே 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது: பட்டுப் போன்ற மிருதுவான கன்னம் தடித்துச் சிவந்தது.

இந்தச் சமயத்தில் நீலா உள்ளே நுழைந்தாள். அவள் கையிலிருந்த புத்தகக் கட்டைக் கீழே போட்டுவிட்டு ரவியை வாரி யணைத்துக் கொண்டு தெருப் பக்கம் போனாள்.

அவள் திரும்பியபோது குழந்தையின் கையிலே பொம்மை வண்டி காட்சியளித்தது. இன்னும் கண்ணீர் கூட வற்றாத அவன் கமலக் கண்கள் ஆனந்த மிகுதியினால் பளபள வென்று ஜ்வலித்தன. அவனைக் கீழே இறக்கி விட்டுவிட்டுப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு நிமிர்ந்த போது நீலாவின் கண்கள் ஒரு விநாடி சூரியின் பக்கம் சென்று திரும்பின.

அவன் வெட்கித் தலை குனிந்தான்.

"குழந்தையை அடித்துக் கொல்லும் ராட்சதன் என்று நம்மைப்பற்றி அவள் கேவலமாக அல்லவா, எண்ணிக் கொள்

வான்! கையிலிருக்கும் காலணாவைக் கொண்டு குழந்தைக்கு வஸ்ட்டியை வாங்கித் தந்திருக்கலாம்; ஆனால் காலையில் காய்கறி வாங்கக் காசுக்கு எங்கே போவது? ஏதோ ஆத்திர மிகுதியினாலே அவனை அடித்து விட்டேன். தாயில்லாக் குழந்தையை, உயிருக் குயிரான என் ரவியை இனி விரலால் கூடத் தொடுவதில்லை!'' என்று எண்ணமிட்டவாறு சூரி எழுந்து உள்ளே சென்றான்.

அவன் மனைவி இறந்து போய் நான்கு வருடங்களாகி விட்டன. நாற்பது ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்த அவனுக்கு இரண்டாந் தாரமாகப் பெண்ணைக் கொடுக்க எத்தனையோ ஏழைத் தகப்பன்மார்கள் காத்துக் கொண்டிருந்தனர். 'மாற்றுத் தாய்' என்னும் வார்த்தையிலேயே தொனிக்கும் கொடுமையை எண்ணியபோது சூரியின் தகப்பனுள்ளம் நடுங்கிற்று. ஏதோ நூற்றிலே ஒருத்தி நல்லவளாக அமையலாம். ஆனால் அந்த 'ஒருத்தி' தனக்கு இரண்டாந் தாரமாக வாய்ப்பாள் என்பது என்ன நிச்சயம்? எனவே, தானே ரவிக்குத் தாயாகவும் தந்தையாகவு மிருந்து அவனைப் போஷிப்பது என்று உறுதி செய்து கொண்டான் சூரி. ஆகவே, பெண்ணைப் பெற்றவர்களின் தாக்குதல்களெல்லாம் அவன் விஷயத்தில் பயனற்றுப் போயின.

★

சூரியின் இந்த வைராக்கிய வாழ்க்கைக்கு மூன்று வருட காலம் எவ்வித பங்கமும் நேரவில்லை. பிறகு......

நம் தமிழ்நாட்டு மாதர் குலத்தின் முன்னேற்றத்துக்காகத் தன் வாழ்நாள் முழுதும் அரும்பாடு பட்டு வந்த ஒரு ஸ்திரீ ரத்தினத்தின் ஆதரவில், தாய் தந்தையற்ற நீலா கல்வி பயின்று சென்னையிலே பெண் பாடசாலையொன்றில் உபாத்தியாயினியாக அமர்ந்தாள். சுயமாக நாலு காசு சம்பாதித்து, அவள் கௌரவமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தபோது, இவ்வளவு நாளும் அவளைக் கண்ணெடுத்தும் பாரா திருந்த மாமனும் பாட்டியும் உறவு கொண்டாடிக் கொண்டு வந்தார்கள்! கிழவி, நீலாவுக்கு 'ஆதர'வாக அவளோடு நிரந்தரமாக வாசஞ் செய்யலானாள்! சிறிதுவக் கிலேஹிதிபொருத்தியின் வீட்டிலே ஓர் அறை வைத்துக் கொண்டிருந்த நீலா, பாட்டியின் ஆசாரத்துக்கு ஒத்துக் கொள்ளும்படியான ஜாகை ஒன்று தேடும்படியாகி விட்டது. 'புலிப் பால்', 'குதிரைக் கொம்பு' இவைகளைக்கூட எங்கேயாவது தேடிப் பிடித்து விடலாம்; இந்தக் காலத்தில் வாடகைக்கு வீடு கிடைப்பதேது?

நல்ல வேளையாகத் தன் சிறு வீட்டிலே ஒரு பாகத்தை அவர்களுக்கு ஒழித்துக் கொடுத்தான் சூரி. 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பர். சூரி பேய் அல்ல; மனித இதயம் படைத்தவன் தான்! எனவே அவன் அவ்வாறு செய்ததில் ஒன்றும் ஆச்சரிய மில்லையல்லவா?

படித்த பெண்களைப் பற்றிச் சூரிக்கு அவ்வளவாக ஒன்றும் தெரியாது. ஏதோ அரையுங் குறையுமாகப் படித்துவிட்டு ஆங்கிலத்திலே நாலு வார்த்தை பேசத் தெரிந்த வக்கீல் வீட்டுப் பெண்கள், முன் பின் தெரியாத கட்சிக்கார ஆண் பிள்ளைகளுடன் அரட்டை யடிப்பதைக் கண்டிருக்கிறான். இது அவனுக்கு அருவருப்பைத் தருவதா யிருந்தது. ஆனால் கல்வி கற்று உத்தியோகம் பார்க்கும் நாகரிகப் பெண்மணியான நீலாவின்


'சான்ஸ்' கிடையாது!

★

வித்வான்:—நான் ரொம்ப நன்றாய்ப் பாடுவேன். தயவு செய்து எனக்கு ரேடியோவில் பாட ஏற்பாடு செய்யுங்களேன்!

ரஸிகர்:—அடடா! ரொம்ப நன்றாகப் பாடத் தெரிந்தால் ரேடியோவிலே 'சான்ஸ்' கொடுக்க மாட்டார்! நீர் எங்கேயாவது சபாவிலே 'ட்ரை' பண்ணிப் பாரும்!

★



தோற்றத்திலும், நடவடிக்கைகளிலும் அவன் கண்ட அடக்கமும் பணிவும் அவனுக்கு ஆச்சரிய மளிப்பவையா யிருந்தன. இந்தப் பத்து மாத காலமாக அவள் அவனிடம் அனாவசியமாக ஒரு வார்த்தை கூடப் பேசியதே கிடையாது!

ரவியின் விளையாட்டுக்களிலும், அழகிய பேச்சிலும் மயங்கிப்போன நீலா அவனிடம் தன் மனதைப் பறி கொடுத்து விட்டாள். நீலா வீட்டிலிருக்கும் போதெல்லாம் ரவிக்கு அவள் அறையிலேதான் வாசம். ரவியை மார்புடன் அணைத்துக்கொண்டு தன் இனிய குரலில், "காக்கைச் சிறகினிலே நந்த லாலா!" என்ற பாட்டை நீலா அவனுக்குக் கற்றுக் கொடுக்கும்போது, சூரி மெய்ம் மறந்து கற்பனை யுலகிலே சஞ்சரிக்கலானான்.

கிழவிக்கு என்னவோ இதெல்லாம் பிடிக்கவே யில்லை.

★

பொம்மை வண்டி வாங்கின அன்று இரவு, வானம் கனத்த மேகங்களால் நிறைந்தது; சூறைக் காற்று வீசிற்று; அண்டம் அதிரும்படியான இடி முழக்கத்துடன் மழை 'சோ'வெனப் பெய்தது. விடிந்த பிறகும் மழை விடாது பெய்து கொண்டேயிருந்தது.

மழைக்குப் பயந்துகொண்டு சும்மா யிருக்க முடியுமா? சூரியும் நீலாவும் தத்தம் வேலைகளைக் கவனிக்க வெளியே போய்விட்டனர். மழை கொஞ்சம் நின்றிருந்த சமயம் பார்த்து, ரவி கிழவிக்கும் வேலைக்காரிக்கும் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் பொம்மை வண்டியை இழுத்துக் கொண்டு தெருவிலே இறங்கிவிட்டான். மழை ஜலம் சிற்றாறுபோல் ஓடிக்கொண்டிருந்தது. பிரவாக வேகத்தில் 'மான் ஹோல்' ஒன்றை மூடியிருந்த வட்டமான இரும்புத் தகடு இடம் பெயர்ந்து, அதிலிருந்து ஜலம் நீரூற்றுப்போல 'குபு குபு' வென்று கிளம்பிக்கொண்டிருந்தது.

"ஹை, ஹை!" என்று கூச்சலிட்ட வண்ணம் வண்டியை இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்த ரவீந்திரன், அந்தத் துவாரத்திலே காலை வைத்து விட்டான்!

ஆபத் சகாயனான ஈச்வரன் ஒருவன் இருக்கிறானல்லவா? அவனுடைய அருளால் அப்பொழுது லைனிலே அந்த வழியாக வந்த ஒருவன், வண்டியிலிருந்து குதித்துக் குழந்தையை இழுத்து வெளியே விட்டான்.

அன்று இரவு ரவிக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. கவலை தோய்ந்த முகத்துடன் சூரியும், நீலாவும் அவன் அருகே அமர்ந்திருந்தனர். ஜுர வேகத்தில் தன் நினைவிழந்து கிடந்த ரவி, வண்டியிலிருந்த தன் பிடியை மட்டும் தளர்த்தவேயில்லை.

டாக்டர் மருந்து கொடுத்துவிட்டு, இரவு தாண்டிவிட்டால் பயமில்லை யென்றும், காலையிலே வந்து பார்ப்பதாகவும் சொல்லிவிட்டுப் போனார்.

நீலா குழந்தையை விட்டு அரைக் கணமும் அகலவில்லை. அவள் மிகவும் வற்புறுத்தியதன்மேல் சூரி வேண்டா வெறுப்பாக ஒரு கவளம் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

கிழவி மூலையிலே முடங்கிக் கொண்டு நித்திரையில் ஆழ்ந்து விட்டாள்.

நள்ளிரவிலே, இந்த இரண்டு ஆத்மாக்களும் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த ஒரு பாலகன் மூலமாகப் பிணைக்கப் பட்டன!

அவன் உயிர் பெற்றெழுந்தால், அவருக்கும் பூலோகத்தில் அமர வாழ்வு; ஏழ்மையிலும் இணையற்ற இன்பம்! அவன் எழாவிடில் ......

மணி மூன்றடித்தது. ரவியின் இமைகள் மெல்லத் துடித்தன; கண்களை அகல விரித்து வண்டியை இறுகத் தழுவிக் கொண்டான். சூரி அவன் தலையின் கேசத்தை மெல்லக் கோதி விட்டான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, "அப்பா! தாத்தம்!" என்றான் குழந்தை.

நீலா ஒரே எட்டில் சென்று டாக்டர் கொடுக்கச் சொன்ன 'மிக்ச'ரை எடுத்து வந்து புகட்டினாள்.

அதைப் பருகியதும் குழந்தைக்கு நன்றாக வியர்த்தது. அவன் உதடுகளிலே புன்னகை யரும்ப, நித்திரையிலே ஆழ்ந்தான்.


கவலை நீங்கிய சூரியும், நீலாவும் ஒருவரை யொருவர் சங்கோசமில்லாமல் அன்றுதான் முதல் தடவையாகப் பார்த்துக் கொண்டனர். அவர்களுடைய கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருகிற்று.

அவ்வளவுதான்; அந்த மண்வண்டியின் மேலே இருவர் கரங்களும் இணைந்தன!

அவர்கள் எதிர்பார்த்ததுபோல் ரவியும் வெகு சீக்கிரத்திலேயே உயிர் பெற்று எழுந்துவிட்டான். அப்புறம் என்ன?—இந்த அநித்தியமான உலகத்திலும் அவர்களுக்கு அமர வாழ்வு; ஏழ்மையிலும் இணையற்ற இன்பம்!

ஓர் அழகிய நங்கை...

இந்திரா! அதைப் பொறுத்தவரையில், கட்டழகான அவள் கணவரை (ஆர். ஐ. என்னில் ஒரு லெப்டினண்ட் அவர்) எல்லோரும் ஆமோதிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான நம் மெல்லியர்களைப்போன்று இந்திராவும் தனது எழிலைப் பாதுகாக்க, புதிய முறையாகிய பாண்ட்ஸைக் கையாண்டு வருகிறாள்.



"ஆனாலும் இத்தனை இடங் கொடுக்கலாகாது!"

...ஆம்! அவள் கணவர் கொஞ்சம் பாண்ட்ஸ் க்ரீம்கள் வாங்கி அவளுக்குப் பரிசளித்தார். அன்றையிலிருந்து அவளுடைய சிங்காரவதனத்தைக் கண்டு மெய்மறந்து, அவளுக்கு பரிசுக்குமேல் பரிசாக வழங்கி வருகிறார்! ஏனெனில், தினம் காலை மாலைகளில் இந்திரா பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்திற்பூசி, சொற்பநேரம் கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசும் அழுக்குமெல்லாம் அத்துடனேயே வந்துவிடுகிறது. பின்பு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாகத் தடவுகிறாள். அது சருமத்தினுட்சென்று, உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்குத் திருப்பியளிக்கிறது. வதனம் புஷ்பம்போன்று மோகன காந்தி வாய்க்கவும் செய்கிறது.

"பட்டைவிட மழமழப்பாயிருக்கிறது உன் வதனம்!"





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் — தினம் காலை மாலைகளில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தை சுத்தம் செய்யுங்கள் — சோப்பு வேண்டாம். ஒன்றிரண்டு வாரத்தில் முகசருமம் சோபிதம் மிக வாய்க்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் — கோல்ட் க்ரீமைத் துடைத்து எடுத்ததும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாகப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திருப்பி அளித்து, வதனத்தை மிருதுவும், பளபளப்பு மாக்கும். அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.

பாண்ட்ஸ் பவுடர் — பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள் — உங்கள் முகச்சாயலுக்கேற்ற வர்ணமாகத் தேர்ந்தெடுத்து அது முகத்திற்கு ரோஜா வீதம் போன்ற ஓர் மோகன காந்தி அளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற் கெழுதவும்: எல். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.

JWT


எல்லா
கார்களையும்
பத்திரமாக
ஓட்டுவது
டன்லப்

மூன்று முயல்கள்

தேவநாதன்

ஒரு காட்டில் மூன்று முயல்கள் வசித்து வந்தன. அவை ஒரு நாள் காட்டில் உல்லாசமாகச் சுற்றி வந்தன. வழியில் கரடியாரின் வீட்டைப் பார்த்ததும், அவைகளுக்கு ஏதாவது விஷமம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. அதற்கேற்றாற்போல் அந்தச் சமயத்தில் கரடியார் எங்கேயோ வேலையாக வெளியே போயிருந்தார். அதுதான் சமயமென்று மூன்று முயல்களும் கரடியாரின் வீட்டுக்குள் புகுந்து, தங்கள் விஷமத்தனத்தை ஆரம்பித்தன.

இந்தச் சமயத்தில் கரடியார் வந்து சேர்ந்தார். கதவு வழியாக முயல்கள் செய்யும் அட்டகாசத்தைப் பார்த்ததும் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உள்ளே ஓடி மூன்று முயல்களையும் தாவிப் பிடிக்க முயன்றார். ஆனால் இரண்டு முயல்களை மட்டும்தான் அவரால் பிடிக்க முடிந்தது. ஒன்று மட்டும் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டது.

அன்று முதல் கரடியார் இரண்டு முயல்களையும் தம்மிடமே வேலைக்கு வைத்துக் கொண்டு அவற்றைப் படாத பாடு படுத்தினார். ஒரு நிமிஷம் கூட கரடியார் அவற்றை வெளியே போக விடுவதில்லை. அவர் எங்கேயாவது வெளியே போகும்போது கூட அந்த இரண்டு முயல்களையும் உள்ளே விட்டுவிட்டு எல்லாக் கதவுகளையும் மூடிக்கொண்டு போய் விடுவார்.

இப்படியே சில தினங்கள் நடந்தன. இரண்டு முயல்களுக்கும் கரடியாருக்கு ஊழியம் செய்து செய்து உடம்புகூட இளைத்து விட்டது. பாவம், கரடியாரின் வீட்டிலிருந்து எப்படித் தப்புவது என்று தெரியாமல் அவை திணறிக் கொண்டிருந்தன.

தப்பிப்போன முயல் தன் சகாக்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து ரொம்பவும் வருத்தப்பட்டது. அந்தக் கஷ்டத்திலிருந்து அவற்றை விடுவிப்பதற்கு ஒன்றும் வழி தோன்றாமல், அது தன் சிநேகிதனான நரியாரை யோசனை கேட்டது. நரியாரும் அதற்கு ஒரு வழி சொல்லிக் கொடுத்தார்.

அன்று கரடியார் தூங்கிக் கொண்டிருந்த சமயம் தப்பி வந்த முயல் சத்தம் போடாமல் உள்ளே சென்று, தன் சகாக்களிடம் நரியார் சொல்லிக் கொடுத்த உபாயத்தைச் சொல்லி விட்டு வந்தது.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் கரடியாரின் வீட்டில் ஒரே கூக்குரல்! கரடியார் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து ஓடிப்போய்ப் பார்த்ததில், இரண்டு முயல்களும் கீழே விழுந்து இப்படியும் அப்படியுமாகப் புரண்டு கொண்டிருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அவை பெரிய சத்தத்துடன் கால்களை நீட்டிப் பேச்சு மூச்சு இல்லாமல் படுத்து விட்டன.

அந்த முயல்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார் கரடியார். அவர்தான் இறந்துபோன மிருகத்தைக் கண்டால் தொடுவது கூடக் கிடையாதே! ஆகவே, அவர் தன் சிநேகிதரான குரங்காரைக் கெஞ்சிக் கூத்தாடி அழைத்து வந்து, இரண்டு முயல்களையும் வெளியே கொண்டு போய்ப் போட்டு விடும்படி கேட்டுக் கொண்டார்.

குரங்கார் அவற்றைத் தூக்கிக் கொண்டு வெளியே போனதுதான் தாமதம்; எங்கேயோ ஒளிந்து கொண்டு அதைப் பார்த்துக்கொண்டிருந்த நரியார் உடனே ஊளையிட்டார். அந்தச் சத்தத்தைக் கேட்டதும் இரண்டு முயல்களும் 'குபீ'ரென பாய்ந்து ஓடி மறைந்தன.



ஏமாந்த கரடியாரும் குரங்காரும் ஒன்றையொன்று பார்த்து விழித்தன.

சங்கீதக் கச்சேரியில்

அரட்டைக்கல்லி

பாகவதர் கல்யாணி ராகத்தை அபூர்வமாக ஆலாபனை செய்து கொண்டிருந்தார். சபையில் எள்ளுப் போட்டால் எள் விழாத கூட்டம். ரசிகர்களின் தலைகளெல்லாம் தாமாகவே ஆடிக் கொண்டிருந்தன. இவர்களுடைய வாய்களிலிருந்து —"ந்ச, ந்ச" "சபாஷ்!" "பலே!" போன்ற சப்தங்கள் வெளி வந்து கொண்டிருந்தன.

இப்படி எல்லோருடைய தலைகளும் ஆடும் பொழுது என் தலை மட்டும் ஆடாமலிருக்க நான் சங்கீத ஞானமற்ற ஜடமா, என்ன! ஆனால் பரிதாபம் என்னவென்றால், எனக்கு முன்னால் உட்கார்ந்திருந்தவர் பாகவதருடைய முகம் தெரியாதபடி மறைத்துக் கொண்டிருந்தார். பாகவதருடைய முகத்தைப் பார்ப்பதற்காக நான் என் தலையை இடது பக்கம் சாய்த்துப் பார்த்தேன். அதே சமயத்தில் எனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த ரஸிகரும் தமது தலையை இடது பக்கம் சாய்க்கவே, எனக்குப் பாகவதரின் முகம் மறுபடியும் தெரியவில்லை. எனவே, நான் வலது புறமாகச் சாய்ந்து பாகவதரை உற்று நோக்கினேன். அட கஷ்டமே! அந்தப் பாவி மனுஷரும் தம்மை அறியாமல் வலது பக்கம் சாய்ந்து என்னை மலைபோல் மறைத்து விட்டார். பிறகு நான் அவருடைய கழுத்தின் இடுக்கு வழியாகப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் இடது பக்கம் ஒருக்களித்துக் கொண்டு உற்று நோக்கினேன். என்ன அநியாயம்! அவர் இன்னும் நன்றாய் மறைக்கும்படியாகத் தமது கையை மடித்து முகவாய்க் கட்டையின் அடியில் முட்டுக் கொடுத்துக் கொண்டார்.

எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. மெதுவாக அவரைத் தொட்டு, "ஸார்! தயவு செய்து கொஞ்சம் இப்படியும் அப்படியுமாகச் சாய்ந்து மறைக்காமலிருக்களேன்! உங்களுக்குப் புண்ணியமுண்டு!" எனக் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்து அவர் முதுகைத் தட்டப் போனேன். இதற்குள் என் பின்னால் உட்கார்ந்திருந்த ஆசாமி என் தோள் பட்டையைத் தட்டி என்னைக் கூப்பிடவே திரும்பிப் பார்த்தேன்.

"ஸார், தயவு செய்து ஒரே மாதிரி அசையாமல் உட்கார்ந்திருங்கள். நீங்கள் பாட்டுக்கு அப்படியும் இப்படியுமாக ஆடுகிறீர்களே? எனக்குப் பாகவதரின் முகம் தெரியாமல் உங்கள் தலை மறைக்கிறதே!" என்றார் அவர்!

என் முகத்தில் அசடு வழிவதை யாரும் பார்க்காமலிருக்க என் மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

★ ○ ★



★

யமப் பயலின் யோசனை!

எருமை மாடுகள் தெருவில் வந்தால் யாரும் ஒதுங்கி நிற்பதில்லை என்பதற்காகப் பையன் செய்த யுக்தி!

★



யசோதரா

28

யசோதரா வந்து சேர்ந்ததும் ராமநாத பாபுவின் உள்ளம் தடுமாறலாயிற்று. அவருக்குத் தம் கல்யாணத்தின்மீது ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. கல்யாணத்திற்கு அழைக்கும் பொருட்டுச் சம்பந்திகள் வந்திருந்த சமயத்தில் மற்ற ஸ்திரீகளுடன் யசோதராவும் நின்றுகொண்டிருந்தாள். ராமநாதபாபு பிறர் அறியாமல் அவளை ஒரு தடவை நோக்கினார். அவளுடைய முகத்தில் ஒருவித அலட்சிய பாவம் குடிகொண்டிருந்தது. அந்த அலட்சியத்திலும் ஒருவித அமைதி நிலவியிருந்ததே ஒழிய, கோபமோ, குரோதமோ தாண்டவமாடவில்லை. ராமநாதபாபுவின் முன்னிலையில் அவள் கருணைச் சிலையாகக் காட்சி அளித்தாள். இதை உணர்ந்த அவருடைய உள்ளம் நெகிழ்வுற்றது. 'வேறு ஒருத்தியை மணந்து கொண்டு யசோதராவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய முன் வந்து விட்டாயே' என்று யாரோ குத்திக் காட்டுவது போல அவருக்குப் பட்டது. கல்யாண அழைப்பு முடிந்ததும், அவர் நேரே தம் அறையை அடைந்து தாம் செய்த காரியங்களைப் பற்றிச் சிந்திக்கலானார். அவருடைய கண்கள் தன்னை யறியாமலே கண்ணீரைக் கக்கின. அதே சமயம் 'திடுதிப்' பென்று விரஜகிசோர் உள்ளே நுழைந்தார். ராமநாதபாபு அவசர அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

"இங்கு ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார் விரஜகிசோர்.

ராமநாதபாபு தலை குனிந்தவாறே, "ஒன்றும் இல்லை, சும்மாத்தான்!" என்று கூறினார்.

விரஜகிசோர் ராமநாதபாபுவின் முகவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்தினார். அவருடைய கண்கள் சிவந்திருந்தன. கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. இதைக் கண்ட விரஜகிசோர் திகைத்துப் போய், "என்ன இது?" என்றார்.

ராமநாதபாபு தழுதழுத்த குரலில், "ஒன்றுமில்லையே!" என்றார்.

"ஒன்றுமில்லையாவது! ஏதோ விஷயமிருக்கிறது......ஆமாம், ஜல்ஸோவைப் பார்த்தாயோ?"

"ஜல்ஸோவைப் பார்க்கவா? அவளைப் பார்க்க எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது?"

"ஏன்?"

"அவளுக்கு—அவளுடைய அன்புக்கு—துரோகம் இழைத்த பிறகு, நான் அவளை எந்த முகத்தைக் கொண்டு பார்ப்பது?" என்றார் ராமநாதபாபு.

இதைக் கேட்ட விரஜகிசோர், யசோதரா வந்திருப்பதனால் ராமநாதபாபுவின் மனம் இப்படி மாறியிருக்கிறது என்பதை உணர்ந்து, "ஆமாம். நீதான் வேண்டிய உபாயங்கள் எல்லாம் செய்து பார்த்து விட்டாயே! இதற்கு மேல் உன்னால் என்னதான் செய்திருக்க முடியும்?" என்று கேட்டார்.

"இன்னும் ஒன்றே ஒன்று செய்திருக்கலாம், அது......"

"என்ன?"

"நான் கல்யாணம் செய்து கொள்ளவே சம்மதித்திருக்கக் கூடாது. அப்படிச் செய்திருந்தால், அவளுடைய அன்புக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக ஆகாதல்லவா?"

"நீயாகவா கல்யாணம் செய்து கொள்கிறாய்? உன் அப்பா — அம்மா அல்லவா கல்யாணம் செய்து வைக்கிறார்கள்!"

"நான் 'முடியாது' என்று சொல்லியிருந்தேனானால் அவர்களால் கல்யாணம் செய்து வைத்துவிட முடியுமா?"

"முடியாதுதான். ஆனால் என்ன ஆகி யிருக்கும், தெரியுமா?"

"என்ன ஆகி யிருக்கும்?"

"லக்ஷ்மிகரமாக இன்று காட்சி அளிக்கும் இந்த வீடு பாழ்பட்டிருக்கும். உனக்கும் உன் அப்பா — அம்மாவுக்கும் மனத் தாங்கல் ஏற்பட்டிருக்கும். உனக்கு நிம்மதியே கிட்டாமல் போயிருக்கும்.'"

"இப்பொழுதுதான் நான் என்ன நிம்மதியைக் கண்டு விட்டேன்? என்னவோ, கிசோர், என் வாழ்க்கையே கஷ்டப்படுவதற்குத்தான் போலிருக்கிறது."


"அப்படியெல்லாம் சொல்லாதே! உனக்கு ஒரு குறைவும் வராது."

"ஜஸ்லோவின் வாழ்வைக் குட்டிச் சுவராக்கி விட்டு, நான் என்னதான் சுகத்தைக் காணப்போகிறேனோ! என் செய்கையினால் மலர்ந்த மணமுள்ள அழகிய புஷ்பத்தைப்போல் இருக்கவேண்டிய அவள், வாடி வதங்கின சருகுபோல் ஆகிவிட்டாள்!"

"இருக்கலாம். ஆனாலும் அவளைப் பழைய நிலைமைக்கு மறுபடியும் கொண்டு வருவது உன் கையில் இருக்கிறதா?"

"இல்லாமல் என்ன, கிசோர்! நான் இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளா விட்டால் எப்பொழுதாவது எங்களிருவருக்கும் சுதந்திரம் கிட்டலாம். அந்தச் சமயம் நாங்களிருவரும் மணந்து கொள்ளலாம் அல்லவா?"

"என் இந்த வீண் பேச்சு? உன் குடும்பத்தில் உனக்கு மேல் பெரியவர்கள் இல்லாமலிருக்க வேண்டும்; அவளுடைய



குடும்பத்தில் அவளுக்குமேல் பெரியவர்கள் இல்லாமலிருக்க வேண்டும். அப்பொழுது தான் உனக்கு நீ எதிர்பார்க்கும் சுதந்திரமோ, சமயமோ கிட்டும். நீ உன் சுயநலம் பூர்த்தி யடைவதற்காக உங்கள் இருவருடைய குடும்பமும் நசிக்கவேண்டும் என்று விரும்புகிறாயா? ராமநாத், நீ இன்னும் அவ்வளவு நீசனாக ஆகியிருக்க மாட்டாய் என்றே நம்புகிறேன்."

இதைக் கேட்ட ராமநாதபாபு, இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு, "இல்லை, அப்படி விரும்பவே இல்லை!" என்றார்.

"அப்புறம் ஏன் இந்த வீண் பேச்சு? கடவுள் சித்தப்படிதான் எதுவும் நடக்கும். நீ எல்லாவற்றையும் தைரியத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஏன், ஜஸ்லோவுக்கும் அப்படித்தானே! அவளுக்கும் எங்கேயாவது கல்யாணம் ஆகத்தான் போகிறது. அவள் உன்னையே உயிருக்கு உயிராக விரும்பி யிருந்தால், நீ சொல்லி யனுப்பியதும் ஒத்துக்கொண் டிருப்பாள் அல்லவா? இப்படி அலட்சியமாக மறுதளித் திருப்பாளா? நீ செய்யவேண்டியதைச் செய்து பார்த்து விட்டாய்! உன்மீது ஒரு குற்றமும் இல்லை."

"என்ன இருந்தாலும் என் ஆத்மா 'நீதான் குற்றவாளி' என்று குத்திக் காட்டுகிறதே!"

இதைக் கேட்ட விராஜகிசோர் இன்னும் அழுத்தமாக, "ராமநாத், கடவுள் புண்ணியத்திலே நீ படித்தவனாகவும், அறிவாளியாகவும் இருந்துகொண்டு இந்த மாதிரி பேசுவது சரியாக இல்லை. நீ இப்படிப் பேசுவாயாகில் ஜஸ்லோவும் உன்மீதுதான் குற்றத்தைச் சுமத்துவாள். உன்னைக் குற்றவாளியாக எண்ணாமல் தன்னையே குற்றவாளியாக அவள் எண்ணிக் கொள்ளும்படி நீ நடந்துகொள்ள வேண்டும். அதுதான் அழகு. புரிந்ததா?" என்று கேட்டார்.

"அதெப்படி முடியும்? நான் வேறு ஒருத்தியை மணந்து கொண்டு அவளுக்குக் கஷ்டத்தை அளிப்பது, பிறகு அவள் மேலேயே குற்றத்தைச் சுமத்துவது என்றால் எனக்கே வெட்கமாய் இருக்கிறதே!"

"நீ என் மூலம் செய்தி சொல்லி யனுப்பியபொழுது அவள் மறுதளித்து, உன்னுடைய மனதைப் புண்படுத்தினாளே, அது மட்டும் நியாயமா? நீயே சொல்!"

"அவள் எங்கே மறுதளித்தாள்? பெரியவர்களின் அனுமதியில்லாமல் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்றுதானே சொன்னாள்?"

"ஆமாம். அதேபோலத்தானே நீயும் உன் அப்பா, அம்மாவின் பிடிவாதத்தின் பேரில் கல்யாணம் செய்து கொள்கிறாய்!"

"நீ சொல்வது உண்மைதான். இருந்தாலும்......"

"இருந்தாலும்—இருந்தாலும் என்பதை யெல்லாம் மூட்டை கட்டி வை! அதை யெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்."

"உனக்கு என்ன தெரியும், விராஜகிசோர்! இந்தக் காதல் இருக்கிறதே, இது மனதை என்ன பாடு படுத்துகிறது, தெரியுமா? நானும் மனதை எவ்வளவோ அடக்கிப் பார்க்கிறேன், முடியவில்லையே!"

"நல்ல வேளை அப்பா! நான் இந்தக் காதல் வியாதியில் விழாமல் தப்பிவிட்டேன். அது எப்படி இருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாது. இருந்தாலும், இதை நான் ஆத்மாவின் பலவீனம் என்றுதான் நினைக்கிறேன்."

"அதனால்தான் நீ சுகமா யிருக்கிறாய் போலும்."

"என்மாதிரி நீயும் ஆகிவிடேன். அப்புறம் நீயும் சுகமா யிருக்கலாம்."

"இருக்கலாம். ஆனால் என் உள்ளம் உன் உள்ளத்தைப் போல் காதல் அற்றதாக இல்லையே! நான் எப்படி உன்னைப்போல் ஆகமுடியும்?"

"சரி, கல்யாணம் ஆகட்டும். அப்புறம் உன் காதல் எல்லாம் என்ன ஆகிறதென்று பார்க்கலாம்!" என்று விராஜகிசோர் புன்முறுவலுடன் கூறினார்.

29

நான்பூரிலிருந்து பிள்ளை வீட்டார் குறித்த நேரத்தில் கல்யாணத்திற்குப் புறப்பட்டனர். இரண்டு மூன்று தோழர்கள் ராமநாத பாபுவைக் 'கோட்டா' செய்து கொண்டே வழிநெடுகப் பொழுதைப் போக்கினர். விராஜகிசோருக்கு வேலை யிருந்தபடியால் அவர் இவர்களுடன் கலந்து கொள்ளவில்லை.

ராமநாத பாபுவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுவதற்குப் பதிலாக வருத்தம் குடிகொண்டிருந்தது. "என் உள்ளம் படும் பாடு இவர்களுக்கு என்ன தெரியும்? பு

தாகக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்களிடம் இருக்கவேண்டிய மகிழ்ச்சியையும் உத்ஸாகத்தையும் இவர்கள் என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். அப்படி அவர்கள் எதிர்பார்ப்பதும் நியாயம்தானே! ஆனால் மனம் ஒப்பாத காரியத்தைச் செய்கிறவனான என்னிடம் அந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் எங்கிருந்து தலைகாட்டும்? விராஜகிசோர் ஒரு மடையன்; அவன் காதல் என்பது 'இதயத்தின் பலவீனம்' என்று ஒரேயடியாகச் சாதிக்கிறான். எனக்கு அவன்மீது நம்பிக்கை ஏற்பட்டால்தானே? இன்னும் இருபத்திநாலு மணி நேரம் கழிந்துவிட்டால் நான் ஜஸ்லோவைப் பற்றி மனத்தால் சிந்திக்கத்தான் முடியுமா? அப்புறம் அவளுடன் 'கல்யாணம்' என்ற பேச்சைப் பேச எனக்கு உரிமை ஏது?" என்று சிநேகிதர்களின் பேச்சில் கவனம் செலுத்தாமலே எண்ணமிடலானார்.

அதே சமயத்தில் யாரோ, "உஸ், அதிகமாகப் பேசாதீர்கள், அப்பா! மாப்பிள்ளை ஒரேயடியாக யோசனையில் மூழ்கிக் கிடக்கிறார்!" என்று சொன்னது ராமநாத பாபுவின் காதுகளில் ஒலித்தது. அவர் சிரமத்துடன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "என் அப்பா, உயிரை வாங்குகிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள்!" என்றார்.

"எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்; நீ உன் அழுமூஞ்சித்தனத்தை விட்டுவிட்டு, புது மாப்பிள்ளையாக, லக்ஷணமாகச் சிரித்த முகத்துடனிருந்தால் போதும்!"

"போங்கடா! நான் என்ன அழுமூஞ்சியாகவா இருக்கிறேன்? நீங்கள் வேண்டுமென்றே என்னைப் பரிகாசம் செய்கிறீர்கள்!" என்று வருத்தம் தோய்ந்த புன்முறுவலுடன் கூறினார் ராமநாத பாபு.

"இப்பொழுது நீ சிரித்துக் கொண்டா இருக்கிறாய்? ஒரு வேளை இன்றைக்கு விளக்கெண்ணெய் — சிளக்கெண்ணெய் சாப்பிட்டிருக்கிறாயோ?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

இதைக் கேட்ட எல்லாரும் 'கொல்' லென்று சிரித்தனர். ராமநாத பாபு வெட்கித் தலை குனிந்தார்.

இதேமாதிரி பரிகாசமும் பேச்சுமாக எல்லாரும் குறிப்பிட்ட சமயத்தில் பெண்ணின் ஊரை அடைந்தனர். வெகு விமரிசையாக அன்றிரவு மாப்பிள்ளை-அழைப்பு வைபவம் நடந்தது. ராமநாத பாபுவின் முகத்தில் மகிழ்ச்சி என்பது பெயருக்குக் கூட எழவில்லை. அன்றிரவு பூராவும் அவர் கண்ணை மூடவே இல்லை. அவருடைய மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. "இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன?" என்று ஒரு சமயம் எண்ணுவார். "இவ்வளவு தூரம் முன்னேறிய பின்னர் அதெல்லாம் எப்படி முடியும்? கடவுள் விட்ட வழி இதுதான் போலும். வீணாக நாம் மனதை அலட்டிக் கொள்வதனால் என்ன ஆகப்போகிறது!" என்று எண்ணுவார், இன்னொரு சமயம்.

இந்த நிலையில் இராப்பொழுது கழிந்தது. மறுநாள் ஒரு விதமாகக் கல்யாணமும் முடிந்தது. ராமநாத பாபு தனிமையில் விராஜகிசோரைச் சந்தித்தபொழுது, ஏமாற்றம் நிரம்பிய குரலில், "ஒரு விதமாக முடிந்ததப்பா!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

"என்ன அப்பா, முடிந்தது?"

"என் வாழ்வின் இன்பக் கனவு—நானும் ஜஸ்லோவும் முக்கிய கதாபாத்திரங்களாக நடித்த என் வாழ்க்கை நாடகம் — ஒருவாறாக முடிந்துவிட்டது என்பதைத்தான் சொல்கிறேன்."

"ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் முடிவும் இருப்பது சகஜம்தானே? இதில்

பிராண சிநேகிதம்!



"உங்காத்துக்காரர் டாக்டருக்கு ரொம்ப சிநேகிதர் போல இருக்கு!"

"ஆமாம், டாக்டரிடம் பிராண சிநேகிதம் அவருக்கு. டாக்டருக்கு உயிரைக்கூடக் கொடுத்துடுவார்!"

ஆச்சரியமோ, வருத்தமோ படுவதற்கு என்ன இருக்கிறது?''

''அது சரிதான். ஆனால் நான் இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிடும் என்று எண்ணவே இல்லை. எனக்குச் சரியாக நடிக்கத் தெரிந்திருந்தால் இவ்வளவு சீக்கிரம் எங்கள் நாடகம் முடிந்திருக்குமா?''

''நல்ல வேளை! சீக்கிரம் முடிந்ததால் தான் சுபமாக முடிந்தது. இல்லாவிட்டால் துயரமாக முடிந்திருக்கும்.''

''சுபமாக முடிந்ததா? இல்லவே இல்லை.''

''இப்பொழுது உனக்கு அப்படித்தான் தோன்றும். போகப் போக நான் சொன்னது உண்மையென்று உனக்குத் தெரியும்.''

''என் உயிர் உள்ளவரை எனக்கு அப்படித் தோன்றவே தோன்றாது!''

''நடக்கப் போவதைப் பற்றிச் சொல்ல நாம் யார்?''

''நடக்கிறதைக் கொண்டு நடக்கப் போவதைப் பற்றி நாம் சொல்லிவிட முடியுமாக்கும்!''

''முடியாது; முடியவே முடியாது! சில சமயம் நீ சொல்வதுபோல் நடக்கிறதே யொழிய, எப்பொழுதுமே அப்படி நடந்து விடுவதில்லை, தெரியுமா?''

''என்னவோ, விராஜகிசோர்! இப்பொழுதெல்லாம் வர வர எனக்கு உன் வார்த்தைகளின் மீதே நம்பிக்கை ஏற்படுவதில்லை. நீ சிநேகிதன்தானா, அல்லது சத்துருவா என்று கூட எனக்குச் சந்தேகமாயிருக்கிறது!''

''என்ன!''

''எனக்கும் ஜுல்ஸோவுக்கும் ஏற்பட்டிருந்த காதலுக்கு உலை வைத்தவன் நீதானே?''

''என் அப்பா என்மீது வீண் அபாண்டம் சுமத்துகிறாய்? கடவுள் ஒருவர் இருக்கிறார்; தெரியுமோ இல்லையோ? அதற்குள் மறந்து விட்டாயே! உனக்காகத்தானே நான் சந்திரபுரத்துக்குக்கூடப் போய் வந்தேன்!''

''ஆமாம், நீ போய் என்ன புரட்டி விட்டாய்?''

''அதற்கு நான் என்ன செய்வது? உன் தலைவிதி அப்படியிருந்தது!''

''தலைவிதியாவது, ஒன்றாவது! ஒற்றைக் காலால் நின்று இந்தக் கல்யாணத்தை முடித்து வைத்தவன் நீதானே, அப்பா!''

''நானா?''

''ஆமாம், நீ மட்டும் பலவந்தப்படுத்தாமல் இருந்திருந்தால் நான் கல்யாணம் செய்து கொண்டே இருக்க மாட்டேன். அப்பாவிடம் ஏதாவது சொல்லித் தட்டிக் கழித்திருப்பேன்.''

''என்னிடம்தான் உனக்குச் சக்கர வட்டமாகப் பேசத் தெரிகிறது! உன் அப்பாவிடம் சொல்வதை நானா வேண்டாம் என்றேன்? அவரிடம் போய் நிற்பதென்றாலே உனக்குத் தொடை நடுங்குகிறது. போடா, போ!''

''என்னவோ, நான் உன்னை வந்து யோசனை கேட்டேனே! என் முட்டாள் தனத்தைத்தான் சொல்லணும்.''

''உன்னைப் போன்ற முட்டாளுக்கு நான் யோசனை சொல்ல வந்தேனே, என் புத்தியைத்தான் செருப்பால் அடிக்கணும்! இது நல்லவனுக்குக் காலமில்லையப்பா! நந்தராம் போல, 'நீயும் ஜுல்ஸோவை இழுத்துக்கொண்டு ஓடிப் போய்விடு' என்று நான் சொல்லியிருந்தால் உனக்குச் சந்தோஷமாயிருந்திருக்கும். என்ன செய்வது, என் மூளை அவ்வளவு மழுங்கிப் போய்விடவில்லையே!...ஆமாம், அது கிடக்கட்டும். நான் சந்திரபுரத்திலிருந்து திரும்பி வந்தபொழுது நீ என்ன சொன்னாய்?''

''அதெல்லாம் ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் இது மட்டும் நிச்சயம். நான் இந்தக் கல்யாணம் செய்துகொண்டிருக்கவே கூடாது!''

''எவ்வளவு நடவைதான் இதைச் சொல்லுவாய்? கல்யாணம் ஆனது ஆகிவிட்டது. ஆனாலும் இப்பொழுது ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. ஹிந்துக்கள் எவ்வளவு கல்யாணங்கள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று சாஸ்திரங்களில் எழுதியிருக்கிறதே, சமயம் வாய்க்கும்பொழுது ஜுல்ஸோவையும் நீ கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் போச்சு! வீணாக வருத்தப்படாதே!''

''பேஷ்! சரியான யோசனை! இவ்வளவு அழகாக யோசனை கூறும் உன் மூளையை மியூஸியத்தில் கொண்டு போய் வைக்க வேண்டும்!'' என்றார் ராமநாதபாபு.

இந்தச் சமயத்தில் அவருடைய சிநேகிதர்கள் இருவர் அங்கு வந்து விட்டதால், பேச்சு அத்துடன் நின்று விட்டது.

(தொடரும்)

மறதி மன்னார்சாமி!

எஸ். வி. எஸ்.

மன்னார்குடி மன்னார்சாமிக்கு நாங்கள் 'மறதி மன்னார்சாமி' என்று பெயர் வைத்திருந்தோம். "ஐந்தரை மணிக்கு 'நரகலோகம்' என்கிற சினிமா தியேட்டரில் 'பாபத்தின் பலன்' என்ற படம் பார்க்க இரண்டு டிக்கட் வாங்கி வைத்துக் கொண்டு உனக்காகக் காத்திருப்பேன்!" என்று முதல் நாள் சொல்லிவிட்டுப் போவான். மறுநாள் அவன் சொல்படி அங்கே போனால் 'நரகலோக'த்தில் மன்னார்சாமியைக் காண முடியாது. 'சுவர்க்க லோக'த்தில் வேறு சில நண்பர்களுடன் 'புண்ணியத்தின் புருஷார்த்தம்' என்ற படம் பார்க்கப் போனதாக எதேச்சையாக அவனை அங்கு பார்த்த நண்பர்கள் நமக்குத் தகவல் சொல்லுவார்கள்!

அடுத்த நாள் மன்னார்சாமியைக் கேட்டால், "நான் உன்னிடம் அப்படியொன்றும் சொல்லவேயில்லையே!" என்று சாதிப்பான்!

ஒருநாளும்தான் மறந்துவிட்டதாக மட்டும் அவன் ஒத்துக்கொள்ள மாட்டான்! "நான் அப்படியெல்லாம் செய்வேனா! நேற்று புரோக்கர் புருஷோத்தம தாஸ் வந்து 'புண்ணியத்தின் புருஷார்த்தம்' பார்க்க வேண்டும் என்றால் உன்னோடு தான் போகவேண்டும்! உன்னோடு சினிமா பார்த்து ரொம்ப நாளாகி விட்டது! நீ வந்தால்தான் ஆச்சு!" என்று ரொம்ப ரொம்பக் கெஞ்சினார். அவ்வளவு பெரிய மனுஷர், அவ்வளவு பெரிய பணக்காரர் நம்ம சிநேகத்தை இவ்வளவு விரும்பும்போது எப்படி மாட்டேன் என்று மறுப்பது? நீங்களே சொல்லுங்கள்!" என்பான். நாம் என்ன சொல்ல இருக்கிறது?

ஆனால் வாஸ்தவத்தில், அன்று அவன் தான் வசிக்கும் தெரு மூலைக்கடை முனியாண்டியாப் பிள்ளையோடு, தன் கைப் பணத்தைச் செலவழித்துக் கொண்டு அந்தப் படம் பார்க்கப் போயிருப்பான்!

இதையெல்லாம் நாம் அவனைக் கேட்டால் நன்றாக இருக்குமா? சிநேக தர்மத்துக்குத்தான் அடுக்குமா? அதனால்தான் நான் அவனை ஒன்றும் கேட்பதே கிடையாது!


* * *

மரகதவல்லி யாருடைய கண்ணுக்கும் அழகாகத் தோன்றவில்லையென்றாலும் மன்னார்சாமியின் கண்ணுக்கு மட்டும் மன்மதனின் காதலியான ரதியாகவே தோன்றி வந்தாள்! தன்னைப் பற்றியும் அடிக்கடி, "அசப்பிலே பார்த்தால் நானும் மன்மதனைத்தான் இருக்கிறேன்!" என்று நினைத்துக் கொள்வான் மன்னார்சாமி!

ஒரு நாள் சாயங்காலம் "லாட்டரிச் சீட்டில் எனக்கு ஐந்நூறு ரூபாய் பிரைஸ் விழுந்திருக்கிறது! உனக்கு இரண்டு வடம் தங்கச் சங்கிலி வாங்கி வரப்போகிறேன் என்றீர்களே, ஒன்றையுங் காணோமே!" என்றாள் மரகதவல்லி.

மன்னார்சாமி ஒரு நிமிஷம் யோசனை செய்தான். வளமான கற்பனையல்லவா! தோன்றி விட்டது அவனுக்கு ஒரு யோசனை!

"மரகதம், நம்ம சிநேகிதன் துரைக்கண்ணு இருக்கிறான் பாரு. அவன் அவசரமாக ஐந்நூறு ரூபாய் வேண்டும் என்றான். கொடுத்து விட்டேன்! அவன் ஒரு வாரத்தில் தந்துவிடுவான். பாரேன், அடுத்த ஞாயிற்றுக்கிழமை உனக்கு இரண்டு வடம் தங்கச் சங்கிலி கொண்டு



உபாத்தியாயர்:—கணக்கை ஏன் தப்பாகப் போட்டாய்? நீட்டு கையை......

உபாத்தியாயர்:—ஏலே! ஏண்டா இன்னும் கையை நீட்டலே?

"எங்க அப்பா உங்களை பால் பாக்கி கேட்கச் சொன்னாரு, அதற்குத் தான் நீட்டினேன்!"

வரல்லேன்னு என் பெயர் மன்னார்சாமி இல்லே!" என்றான்.

ஒரு வாரம் சென்றது. ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம், மலர்ந்த முகத்துடன் மன்னார்சாமி வீட்டுக்குள் நுழைந்தான். மரகதவல்லி பிடித்துக்கொண்டாள். "என்னாங்க; இன்னிக்குத் துரைக்கண்ணு இங்கே வந்திருந்தார். அவரைக் கேட்டேன் — உங்களிடம் ரூபாயோ கடன் வாங்கவில்லையாமே! அவரல்லவா உங்களுக்கு இருபது ரூபாய் கடன் கொடுத்ததாகச் சொன்னார்!" என்றாள்.

மன்னார்சாமி அகப்பட்டுக் கொண்டான்! ஒரு கணம் யோசித்தான். "இவ்வளவிற்கும் காரணம் துரைக்கண்ணிடம் நாம் விஷயத்தைச் சொல்ல மறந்து போனதினால்தானே! சீச்சீ! நமக்கு ஞாபக சக்தியே போதவில்லையே!" என்று வருத்தப்பட்டான்.

"அப்படியானால் எனக்குச் சங்கிலி கிடையாதுதானா?" என்று கேட்டாள் மரகதவல்லி.

"உனக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு நான் செய்யாமல் இருப்பேனா? இதோ சங்கிலி!" என்று ஒரு வெல்வெட் பெட்டியிலிருந்து இரண்டு வடம் சங்கிலியை எடுத்துக் காண்பித்தான்.

மரகதவல்லியின் கண்கள் அகலமாக விரிந்தன. முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. மன்னார்சாமி மரகதவல்லியின் மதிப்பிலே பல படிகள் உயர்ந்து விட்டான்!

"ஆறு மாதத்துக்குக் கவலை விட்டது!" என்று எண்ணினான் மன்னார்சாமி.



பெண்ணின் தகப்பனார்:—இந்தாங்கோ, இந்த ஆயிரம் ரூபாயை வரதக்ஷிணையாக வாங்கிண்டு, கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைத்துடுங்கோ; என்ன யோசிக்கிறேள்?

பிள்ளையின் தகப்பனார்:—என்ன சார் இது! ஆயிரம் ரூபாயா? சே, சே! கவர்ன்மெண்டிலேயே இரண்டாயிரம் ரூபாய் வரையில் வாங்கலாம்னு சொல்லியிருக்கானே; நீங்க அதுக்கே குறைச்சுட்டேளேன்னுதான் யோசிக்கிறேன்!

ஆனால் அவன் துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது!

அந்தச் சங்கிலியைப் போட்டுக் கொண்டு மறுநாள் மரகதவல்லி குளித்ததனால், அது கருத்துத் தன் சுயரூபத்தைக் காட்டிற்று! அதைப் பார்த்த மரகதவல்லி விடுவாளா, மன்னார்சாமியை!

அவள் அர்ச்சனை செய்ய, மன்னார்சாமி யோசனை செய்ய ஆரம்பித்தான். "அடாடா! அந்தக் கடைக்காரன் சொல்லித்தானே யனுப்பினான்,—தண்ணீர் பட்டால் கருத்துவிடும் என்று! சொல்லியும் மறந்து விட்டேனே! என் புத்தியைச் செருப்பாலே அடிக்க வேண்டும். இந்த மறதி என்பதில்லையானால் நாம் எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்திருக்கலாம்? எல்லாம் வீணாகப் போய்விட்டதே!" என்று எண்ணி வருத்தப்பட்டான்.

அப்போது மரகதவல்லி, "உங்களால் நகை செய்து போட முடியவில்லையென்றால் உண்மையைச் சொல்லி விடுகிறதுதானே? ஏன் இந்தப் பொய், பித்தலாட்டங்கள் எல்லாம்!" என்று கடுமையாகச் சொன்னது மன்னார்சாமியின் மனதில் நன்றாகப் பதிந்தது.

* * *

அன்று நான் மன்னார்சாமியைச் சந்தித்தேன்.

"என்ன மன்னார்சாமி, சௌக்கியமா?"

"என்னமோ இருக்கேனுங்க!"


"என்ன, மன்னார்சாமி ஏன் இப்படிக் கருதி குறைந்துவிட்டது? ஜுரம் கிரம் வந்ததா?"

"அதெல்லாம் இல்லே, ஸார்! இனிமே உண்மையே பேசி விடுகிறது என்று தீர்மானித்துவிட்டேன்!" என்றான்.

"ஏன்?"

"ஒரு பொய் சொன்னால் அதை முழுக்க முழுக்கச் சொல்லிக் கொண்டு வர ஞாபக சக்தியும் பலமாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உண்மையைச் சொல்லிக் கொண்டு வந்து விட்டால் ஞாபக சக்தி என்பதே அவசியமில்லே. நம் போன்ற மறதியுள்ள ஆசாமிக்குப் பொய், புளுகு எல்லாம் கட்டி வரவே இல்லீங்க! அதனால்தான் உண்மையே பேசி விடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டேனுங்க!" என்றான் மறதி மன்னார்சாமி.


"பேஷ்! ஆனால், மன்னார்சாமி!—ஒரு விஷயம். நீ இப்போது சொல்லுகிற விஷயத்தையாவது ஞாபகமாக மறந்து போகாமல் எப்போதும் மெய்யே பேசிக் கொண்டு வா—உருப்பட்டுப் போவாய்!" என்று பதில் சொல்லி அனுப்பினேன்.



லக்ஸ
டாய்லட் சோப்பினால்
அழகுபடுத்தும்
சுலபமானமுறையை
ராஜகுமாரி
சொல்கிறார்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX
LUX TOILET SOAP
மேனியை அழகுபடுத்திக் கொள்வதில் தேர்ச்சிபெற்ற எல்லா சினிமா நட்சத்திரங்களும், மென்மலரின் இதழ் போல் மிருதுவானதும் களங்கமின்றி பளபளப்பானதுமான சருமம் ஏற்பட லக்ஸையே நம்பலாம் என்கிறார்கள். அதன் சுகமளிக்கும் வீரியம் வாய்ந்த நுரை சருமத்திற்குள் புகுந்து நீங்கவிடா விக்கும் மாசு மறுக்களை சுலபமாக சுத்தம் செய்து விடுகிறது. ராஜகுமாரியின் அழகு முறையை நீங்களும் 30 நாட்கள் கையாளுங்கள் — பிறகு அதன் சுகமாக சுத்தம் செய்யும் தன்மையை கண்டு மகிழ்வீர்கள்.
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
LTS. 136-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



ஏஜண்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், தைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; ஸ்ரீஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி: எம். வி. ஏ. ஹைதர் & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.



Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



ALKI நவம்பர் 17, 1946 4 அணா

REGD. NO. M. 4392



மதராஸ் ஸிடி ஏஜன்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராஃப்ட்ஸ் ரோடு. திருவல்லிக்கேணி, மதராஸ்